V3 910 10 6 Mch 1980

3L
m2·11, N78 ICN
N30·3·10.
189094

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

| வருஷ சந்தா | | காரியாலயம்:— |
|---|---|---|
| உள் நாடு | ரூ. 7 8 0 | No. 11, வேளாளர் தெரு, |
| புற நாடு | ரூ. 9 0 0 | புரசைபாக்கம், சென்னை. |

Vol 3.] 1930 ஹு மார்ச்சு மீ 6உ [No. 10.

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 181 |
| 2. | அப்பர் (மிருதங்கமும் தாளமும்) E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. | 183 |
| 3. | ஆச்சரிய சூடாமணி (சூர்ப்பணகை அங்கம்) R. முத்தையர் | 185 |
| 4. | மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. | 188 |
| 5 | நம்மாழ்வார் வைபவம் (முதல்பத்து) K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. | 189 |
| 6. | தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) | 190 |
| 7. | இலஞ்சிப் பாவை (இராதாகிருஷ்ணன் சிற்றம்) T. S. நடராஜபிள்ளை, B A., B. L. | 193 |
| 8. | கம்பராமாயணம் (மந்திரப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. | 195 |
| 9. | வர்த்தமானம் | 199 |


## கலா நிலயம்

### சுயநலச் சோதனை.

### 5

செயலொன்றை நிகழ்த்துகின்ற காலத்தில், அதன் பயனைத் தன்னுடைய இச்சை நிறையவேண்டும் என்கின்ற நோக்கத்துடனேயே எவ்வகைச் செய்கையும் இயற்றப்பெறுகின்றதென்பதுபற்றி யாதொரு ஐயமுமில்லை. இவ்விச்சை நிறைவதைத்தான் ஒவ்வொருவனும் தன் நன்மை என்று நினைக்கின்றான். ஒரு கருமத்தால் நினைத்தபடி இச்சை நிறைகின்றதோ இல்லையோ என்பதைக் கணக்கெடுக்காமல் செய்கையின் அளவுவரையில் உரைப்போமாயின், எவ்வகைச் செயலும் நற்செயல் என அழைப்பதற்குரியதாவதையும் முன்னர்க் கண்டோம்.

இச்சை நிறைந்தால் அது அடங்குகின்றது. அடங்கியபின் முயலவேண்டிய செய்கையு மில்லை. ஆதலின், அவ்வாறு இச்சை அடங்கிச் செயலற்ற நிலையை அடைவதே எவனும் தான் பெறுதற் கவாவுகின்ற நன்மையாய் இருக்கின்றது. ஆனால், தனித் தனிச் செயல்களின் பயனேனும், செய்கைவரிசைகளால் தொடர்கின்ற தொழில்களின் பயனேனும், தொழில்களின் தொடர்ச்சியாய வாழ்நாள் போக்குவரவுகளேனும் இச்சையைப் பூர்த்திசெய்வது இல்லையென்பது உலகறிந்ததொன்றாகையால், தான் தேடிய நன்மையை ஒருவன் அடைந்தான் என்பது அருமை யாவதும் அறியாதார் சிலரே. இது தீக்கருமம் நற்கருமம் என்னும் இருதிறத்திலும் உண்மையாய் நிற்பதை உணர்தற் குதவவல்ல உதாரணங்களை முன்னரே விளக்கி யிருக்கின்றோம். பொருளளவில் தமக்குப் போதுமென்ற வொரு அரியநிலை யெய்தினரேனும், உள்நின்று முற்றிலும் தான் நிறைய வேண்டுமென விழைந்திருக்கும் இச்சை எல்லாப்படியானும் நிறைந் தடங்கியது என்ப தொருபோது மில்லையே. ஈட்டிய பொருளைத் தீதில் நெறியில் துய்ப்போரும் இச்சையின் இறுதி கண்டவ ராகார். ஒருகுறை நீங்கலாம், மறு குறை மறைபலாம். இச்சையென்றதே அடங்க நிறைபும்வகைபோகாணார். பின்னும்பின்னும் ஓர்குறை அதனில் நிறையாது நின்றே யிருக்கும். ஆகையால், தம்முடைய முயற்சியால் ஒவ்வொரு குறையை ஒவ்வொருவேளை ஒவ்வோரளவு விலக்கிக்கொண்டார் என்பதே கடனாகின்றது. இச்சை நிறைந்தாலன்றி நன்மை என்ற முடிவிற்கு இடமில்லையாதலால் இவைகளால் அவர் நன்மை செய்துகொண்டனர் என்று மதிக்க, தர்க்கமுறை இடந்தராது. பொறாமை பேராவா காமம் வெகுளி முதலிய தீக்குணங்கள் தூண்டுதலால் தீச்செயல்கள் செய்வோரும் ஒருவித இச்சையை நிறப்பும் பயனை நாடுவோரே யன்றி வேறாகார். இதனாலும் இச்சை நிறைவதில்லை என்பதும் அநுபவம். இச்சையென்னும் சக்தியிலே இனி இடமில்லையென்று முற்றிலும் நிறைந்து அடங்கினாலல்லாமல் நன்மையென்னும் பயன் நேர்ந்ததாகா தாகையால் இவர்களும் நன்மைசெய்துகொண்டவ ரல்லர். ஆயினும், உலகவழக்கில் முன்னவர்க்கும் இப்பின்னவர்க்கும் ஒரு பேதம் உளது. தீவினை புரியாதார் திறத்தில், இச்சை நிறைதலென்னும் நன்மை பயக்கவில்லையெனினும், அவர் தீமையை அடைந்தார் என்பதில்லை. மற்றவரோ, நன்மையை அடையவில்லை யென்பது

டன் தீமையை அடைந்தார் என்னுஞ் சொல்லிற்கும் இலக்காகின்றனர். ஆயின், தீமையை அடைதலென்னும் இச்சிறப்புச்சொல் குறிப்பது யாதெனில் அது, நிறைவடைய முயல்கின்ற இச்சையானது சிறிதளவு முன்னரே சேர்த்துவைத்திருப்பதையும் இதனால் சிதைத்துவிடுவதே யாகும்.

எனின், எவ்வகைநாடினும் இச்சைமுற்று மடங்க வல்லதொரு நிறைபயனே நன்மையின் இலக்கணம் என்பதை நினைவிற்கொண்டு மேலினித் தொடர்வோம்.

மானதசாத்திரத்தின் உதவிகொண்டு மாநுட இச்சையின் மறைபொருள் பான்மையைச் சிறிதே சோதிக்க முயன்றிருப்போர்க்கும்,எளிதிலது போதுமெனத் திருப்தியடைவதொன் றன்றென்பது புலப்பட்டிருக்கும். மனிதர்க்கு எண்ணம் என்னு மொரு சக்தியும், இச்சையென்னு மொருசக்தியும் இருக்கின்றனவென முன்னரே சொன்னோம். எண்ணத்தினுள் அடங்கக்கூடிய பொருள்களின் அளவு எவ்வளவோ அவ்வளவே இச்சையினுள் அடங்கக்கூடிய பொருள்களின் அளவுமாகும். எனவே, நாம் எண்ணக்கூடியவைகளையெல்லாம் இச்சிக்கவுங் கூடும். மானுட எண்ணம் பரவிக்கதுவவல்ல இடத்திற்கும்பொருளிற்கும் எல்லை எத்துணைப் பெரியதென இயம்புவதும் அரியதாகி இருக்கின்றது. இப்பூவுகை மடங்கலும் அன்றியே, கணக்கில் பல்கோடி தாரகைகளுடன் விண்ணையும், நமது எண்ணத்தால் கதுவிக்கொள்ளலா மன்றோ. சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களுக்குப் புலப்படும் பொருள்கள் மாத்திரமல்லாமல், தர்மம் நியாயம் சக்தி கலைகள் முதலியவைகளும் எண்ணத்திற்குள் அடங்கக்கூடியனவாம். அங்கு இங்கு என்னும் அலகில்லாப் பரம்பொருளும் எண்ணத்தி லடங்குகின்றதென்னின் பின் இதன் பெருமையைப் பேசவேண்டுமோ. இவ்வகைப் பொருள்களில் எதனையேனும், மற்று அனைத்தையும் ஒன்றாய்த் தொகுத்தேனும் நமதுஎண்ணத்திற்கு இலக்காக்கிக்கொள்ள இயலும்; ஆதலின் அவை நமது இச்சைக்கும் இலக்காக இயன்றவைகள்; ஏனெனில், மனிதன் எண்ணுவதையெல்லாம், வேண்டுமெனின் இச்சிக்கவுங் கூடும் என்று முன்னர்ச் சொல்லியிருக்கின்றோமே. நிகிலப்பொருள்கள் எல்லாம்,மற்றுநினைவிற்குள் அடங்குவன அனைத்தும்இச்சைக்குள் அடங்கும்.எனின், எல்லாப்பொருள்களும் அடங்குதற்கு இயன்றஇடம் இச்சையில் இருக்கின்றதென்பது ஏற்படுகின்றது. ஆதலால், பஞ்சபூதங்களும் பிரபஞ்சமடங்கலும், குணம் சக்தி முதலியயாவையும் ஒன்றுகுறையாமல் தன்னுள்சேர்ந்தாலன்றி இச்சைநிறைந்தது ஆகாது. அது நிறைந்தாலன்றி அடங்குதல் இல்லை—நிறைந்து அடங்கினாலன்றி இச்சையின் பயனை எய்தினவர் ஆகோம்—அப் பூரணமான பயனே நன்மை என்பதாகையால், இந்தஇச்சையை இவ்வளவு பெற்றோம்,அந்த இச்சையை அவ்வளவு பெற்றோம் என்று சிந்தித்தலின்றி,இச்சை என்பதன் முழுஇடமும் நிறைந்து முற்றுவதொன்றே நன்மை எனப் புலப்படும். அலகிலா இடமுடையது இச்சை; ஆகையால் அலகுள்ளன எவையும் அதை நிறைக்க இயலாது. எனவே, தன்னைப்போல் அலகிலாத வொன்றினாலேயே இச்சை நிறைவதெனின் நிறையக்கூடும். அவ்வொன்று யாதெனத் தேர்ந்து, அதனை அடையமுயல்வதே நற்செய்கை யாவதோடு, அடைந்தபின் நன்மையையுஞ் செய்ததாகும்; மற்றதெல்லாம் மடமை. அன்னது யாதென இனி நாம் தெருள நிற்கின்றோம்.

இச்சையின் முடிவே, அது நாடும் பயன் என்று சொன்னோம். அப் பயன் என்பதன் மறுபெயரே நன்மை. எனவே, முடிவு பயன் நன்மை என்பன ஒருபொருட் பன்மொழிகள் ஆவதை உணரலாம். இவ்விதம் முடிவுப்பயன் என்பதும் நன்மையென்பதும் ஒரேகருத்தில் மாறிவருவதைக் காட்டுதற்கு, இவ்வுண்மையை ஓராமல் நாம் வழங்குகின்ற சில மொழிகளுங்கூட நுண்ணியதோர் வகையில் உதவுகின்றன. ஒருபொருள் அதற்குரிய பயனைத் தரவல்லதா யிருக்கின்ற நிலையிற்றான் அதனை 'நல்லது' என்று அழைக்கின்றோம். வசிப்பதென்னும் பயனிற்குரியதா யிருக்கின்ற வீடு, நல்ல வீடு என்னலாகின்றது. கத்தியின்பயன் வெட்டுதல்; வெட்டுவதற்குரிய கத்தியை நல்ல கத்தி என்கின்றோம். அப்படியே நல்ல மருந்து, நல்ல புஸ்தகம், நல்லொழுக்கம், நல்ல குதிரை என்னும் போதெல்லாம் அப்பொருளை அதற்குரிய சிறப்புப் பயனை நோக்கி, அப் பயனிற்குரியது அது என்னுங் கருத்தை 'நல்ல' என்னும் அடைமொழியால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தன்னுடைய தனிப்பயனைத் தருவதற்கு உதவியாயிருக்கின்ற காரணத்தால் மட்டுமே 'நல்லது' என்னும் அடைபெறுகின்றனவே யன்றி அப்பயனுமே நாம் முன் குறித்த இலக்கணத்தின்படி நல்லதாயிருக்க வேண்டுமென்ற நியதியில்லை. நல்ல கத்தி என்னும் போது அண்மைப்பயனாகிய "வெட்டுதற்கு இக்கத்தி உதவும்" என்பதற்குமேல் நம்கருத்துச் செல்வதில்லை. படுகொலை புரிவதும் 'அந்நல்ல' கத்தியே. நல்லபொய், நல்ல விஷம் என்று சிலசமயம் செப்புகின்றோம். அப்பொழுது, பொய்யின் பயனாகிய வஞ்சனையும் விஷத்தின் பயனாகிய மரணமுமே கைகூடும் என்பதொன்றே இதன் கருத்து. வஞ்சனையும் மரணமுமாகிய அப் பயன்களும் நல்லனவென்று நினைக்கும் நோக்கம் இச்சொற்றொடர்களில்இல்லை. பாம்புகடித்தலின் பயன் மரணத்தின் விரைவு. அதனைச் சாதிக்கின்ற பாம்பிற்கு நல்லபாம்பு என்ற பெயரல்லால் வேறுபெயர் இல்லாமை வியப்பன்று. "இது நல்ல பாம்பாயிற்றே, கடித்தால் மருந்தில்லையே," என்பவரே மீண்டும், "இது கடித்தால் சாவார் திண்ணம், மருந்தும் மந்திரமும் இல்லை; கெட்ட பாம்பாயிற்றே இது" என்றும் வழங்குவார். இது முரண்பட மொழிதலன்று. செய்கையின் பயனை நோக்குங்கால் நன்மையும், அப்பயனும் நன்மையை நோக்குங்கால் கெடுதியும் தோன்றி நின்று, உலகவழக்கில் நன்மை தீமை என்பன அண்மைக் காட்சியினது சிற்றெல்லையின் தன்மையையே இது வற்புறுத்துகின்றது.

ஆகையால், முன்காட்டிய உதாரணங்களின்படி, ஒன்றினது நன்மை இதுவென்ன நாம் உரைக்கும்போது, இதற்கு நல்லது அதற்கு நல்லது என வரையறுத்துப்பேசுகின்றோம்.ஒன்றுஒருபோது ஒன்றிற்கு நல்லதாயிருப்பது மறுபோதுவேறொன்றிற்கு நல்லதாயிருக்காது. இரணவைத்தியனுடைய கத்திஅறுப்பதற்குநல்லதாயிருக்கலாம். ஆனால்சுத்தம்செய்யாதகத்தி கொண்டு அறுப்பானாயின், அறுப்பதால் அவன் எய்த



முயன்ற பயனிற்கோ கேடு விளையும். அறுத்து இரணத்தை ஆற்ற நினைத்தான். ஆனால் அறுப்பதற்கு நல்லதாயிருந்த அக்கத்தி ஆற்றுதற்கு நல்லதாயிராமல் நோயாளியின் மரணத்திற்கே காரணமாகலாம். ஆகையால் கத்தியென்ற வளவில் நல்லதாயிருந்த அது,முற்றிலுங் கெட்டதான இரணவயித்தியக் கருவியாவதுங் கூடும். இதனின்று நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மை மிகவும் முக்கியமானது. ஒரு பொருள் அல்லது ஒரு கருமம் நல்லது என நாம் சொல்வதற்கு முன், அது செய்து முடிக்கவேண்டிய பயன்கள் எல்லாவற்றையும் கணக்கெடுத்துப் பார்க்காமற் போனால், நாடிய நன்மையில் பெரிதும் பிழைத்தவராவோம். ஒன்றைக்குறித்து ஒவ்வொருபோது இது இன்னதற்கு நல்லது எனச் சொல்ல இயலுமேயன்றி, அவ்வொன்று எவ்வரிசைச் செய்கையைச் சார்ந்திருக்கின்றதோ, அவ்வரிசையின் முற்றிய முடிவின் தன்மையைக் கருத்துட்கொண்டு மதிக்குமுன், இது 'நல்லதே' என இயம்புதல் அறிவன்று. ஆனால், நாம் ஒருவனைப் பார்த்து 'இவன் நல்லவன்' என்னும் போது,இன்னதற்கு நல்லவன் அன்னதற்கு நல்லவன் என்ற நினைவின்றி 'அவனே நல்லவன்' என்ற நினைவால் அன்றோ விவகரிக்கின்றோம். அவ்வாறே, மானுடமுயற்சிகளிற் சிலவற்றைக் குறித்து, "இந்த இயக்கம் நல்லது,இந்தக் கருமம் நல்லது, இதுநல்லபொருளாதலால் இதனை அடைதல்வேண்டும்" என்று விளம்புங்காலையிலும், அதனதன்வரையில் அதனதன் அண்மைப் பயனைத்தரும் என்ற கருத்து மட்டுமேயன்றி, அது சார்ந்துள வரிசையின் முடிவாய முற்றிய பயனையே நன்மையென முன்னிப் பேசுகின்றோ மென்பதும் ஊன்றிப்பார்த்து ஆராய்ந்தால் தெரியவரும். வாழ்நாள் முழுவதும் ஒன்றினின்று ஒன்று தொடர்கின்ற செய்கை வரிசையாம். அவ்வாழ்க்கையின் முற்றிய பயனே நன்மை. இப்பயனிற்கு உரியன மாத்திரமே நல்லன. அப்பயன்தான் தனது இச்சை குறைவற நிறைதல் என்பதை முன்பு சொன்னோம். ஆதலின், நமது இச்சையை நிறைத்துக் கொள்வதே நமது நன்மை. சிற்றின்பங்களால் இச்சை நிறைய இயலாதென்பதை விளக்கியிருக்கின்றோ மாதலால், இச்சையை நிறைக்கவல்லது வேறொன்று யிருத்தல் வேண்டும். அது யாது?

# அப்பர்

## 8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

## 4. மிருதங்கமும் தாளமும்

### (i) மிருதங்க வகுப்புக் கருவிகள்.

[164-வது பக்கத் தொடர்ச்சி]

ஈமக் காட்டில் பெருமானுடும் திருநடனத்திற்கு முழவத்தினிசை யின்றியமையாததே. அதை அப்பர்,

காந்தன கொள்ளி விளக்குங்
கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும்
பயின்றறி யாதன பாட்டும்
அரங்கிடை நூலறி வாள
ரறியப்ப டாததோர் கூத்தும்
நிரந்த கெடிலப் புனலு
முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதியா தொன்றுமில்லை யஞ்வருவது மில்லை

திருவதிகை வீரட்டானம் - பண் - காந்தாரம் 6

என்பர். இதையே சம்பந்தரும்,

[செய்யப்
கூடரவ மொந்தைகுழல் யாழ்முழவி னோடுமிசை
பீடரவ மாகுபட ரம்புசெய்து பேரிடப மோடும்
காடரவ மாகுகனல் கொண்டிரவி னின்றுநடமாடி
ஆடரவ மார்த்தபெரு மானுறைவ தவளிவணலூரே,

என்றனர்.

திரு அவளிவணல்லூர் - பண் - காந்தாரம், 7.

### (ii) மிருதங்கக் கருவிகளின் பயனும் தாளவமைதியும்.

இவ்வாறு நாடகசாலையிலும், செல்வமலி வீதிகளிலும் பாரதியரங்கிலும் முழங்கும் மிருதங்க சப்தம் எக்காரணத்தால் யாவராலும் விரும்பப் பட்டதென ஆயுங்காலை, அதன் தாளஉதவிக்கே என்பது ஏற்படும்:—

தண்டேந் தாளமுங் குழலுந்
தண்ணுமைக் கருவியும் புறவில்
கொண்ட பூதமு முடையார்
கோலமும் பலபல வுடையார்
கண்டு கோடலு மரியார்
காட்சியு மரியதோர் கரந்தை
வண்டு வாழ்பதி யுடையார்
வாழ்கொளி புத்தூ ருளாரே.

சம்பந்தர்.

தமிழினீர்மை பேசித்தாளம் வீணைபண்ணிநல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கையிடமோவார்
குமிழின்மேனி தந்துகோல நீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய பவளவண்ணரே.

சம்பந்தர்.

இதையே திருநாவுக்கரசுநாயனாரும் அடையாளத் திருத்தாண்டகத்தில் இருமுறை வற்புறுத்தும் சொற்றொடர்களை நோக்குக:—

பாடுமே யொழியாமே நால்வே தம்மும்
படர்சடைமே லொளிதிகழப் பனிவெண்டிங்கள்
சூடுமே யரைதிகழத் தோலும் பாம்புஞ்
சுற்றுமே தொண்டைவா யுமையோர் பாகம்
கூடுமே குடமுழவம் வீணை தாளம்
குறுநடைய சிறுபூத முழக்க மாக்கூத்
தாடுமே யந்தடக்கை யனலேந் தும்மே
யவனாகி லதிகைவீ ரட்ட னாமே. 5.
குழலோடு கொக்கரை கைத்தாள மொந்தை
குறட்பூத முன்பாடத் தானா டும்மே

கழலாடு திருவிரலாற் கரணஞ் செய்து
  கனவின்கட் டிருவுருவந் தான்காட் டும்மே
எழிலாருந் தோள்வீசி நடமா டும்மே
  யீமப் புறங்காட்டி லேமந் தோறும்
அழலாடு மேயட்ட மூர்த்தி யாமே
  யவனுகி லதிகைவீ ரட்ட னமே. 7.

அப்பர் - அடையாளத் திருத்தாண்டகம்.

எக் கருவியின் பாடலாயினும், தாளம் இன்றியமையாதது. வீணையில் தாளம் கொடுக்கும் மூன்று நரம்புகள் உளவெனினும், எத்தகைய வீணைவல்லோருக்கும் தாளம் சரிவர நிற்பது கடினம் ஏனெனில் இசையைக் கவனித்துப் பாடுவோர் தாளத்தைச் சுதா காப்பது சாமன்ய மன்று. தனி இசைக்கருவியாய்த் தாளக்கருவியின் துணையின்றிப் பாடக்கூடிய வீணைக்கும் மிருதங்கத்தை உதவிக்கருவியாகக் கையாள்வர். இதனுல் வீணைக்கும். மிருதங்கவகைக் கருவி, தாளக்கொட்டுக்கு முக்கியமாகும். யாழுக்கும் அவ்வாறேயாம்:—

மண்ணொலா முழவும் மதிர்தர
  மாடமாளிகை கோபு ரத்தின்மேல்
பண்ணியாழ் முரலும் பழனத்திருப் பனையூர்
வெண்ணி லாச்சடை மேவிய
  விண்ணவ ரொடுமண் ணவர்தொழ
அண்ணா லாகிநின் ருரவ ரேயழ கியரே

சுந்தரர்.

மிடற்றைக் கருவியாய்க் கொண்ட புகலியர்கோன், கையையே தாளக் கருவியாக்கி முதல்முதல் பாடத் திருக்கோலக்காவில் சிவபெருமான் பொற்றாள மீந்தனர். எனவே மிடற்றுக் கருவிக்கும் தாளக்கருவி முக்கியமென்பது இசைவல்லோர் கருத்து. நடிப்பதிலும் தாளத்திற்கு ஒப்ப அடிபெயர்த்தாடுவர். வேட்டுவ வரியில், சாலினி

தெய்வ முற்று மெய்ம்மயிர் நிறுத்திக்
கையெடுத் தோச்சிக் கானவர் வியப்ப
விடுமுள் வேலி யெயினர்கூட் டுண்ணு
நடுவூர் மன்றத் தடிபெயர்த் தாடி"

சிலப்பதிகாரம் - வேட்டுவ வரி - 8 - 12.

என்பதற்கு அடியார்க்குநல்லார் "தெய்வத் தன்மையுற்று மெய்ம்மயிர் சிலிர்த்து மூரிநிமிர்த்த கைகளை ஒன்றையும் இரட்டையுமாக அவிநயத்தோடே கூட்டித் தாளத்திற்கு ஒப்ப......ஆடி" என்பர். சுவைகாட்டுதற்குத் தாளம் இன்றியமையாதது.

பண்ணும்பத மேழும்பல வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதோர் சுவையும் உறுதாளத்தொலிபலவும்
மண்ணும்புன லுயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானனிடம் வீழிம்மிழ லையே.

சம்பந்தர்.

இதற்காகவே ஆடும்போதும் பாடும்போதும் இக்காலத்திலும் கச்சேரிகளில் மிருதங்கக் கருவிவல்லோனைச் சேர்த்துக்கொள்கின்றனர். வேதவொலி யாயினும்சரி, நட்டமாடுவதாயிருப்பினும் சரி, தாளக்கருவி வேண்டியதே. சரிவர உபயோகிப்பின், பறையும் இதற்குப் பயன்படு மென்பர் மேலோர்:—

மறையிெனொலி கீதமொடு பாடுவன
    பூதமடி மருவிவிரவார்
பறையிெனொலி பெருகநிகழ் நட்டமமர்
    பட்டிசர மேயபனிகூர்
பிறையிெனொடு மருவியதோர் சடையினிடை
    யேற்றபுன லேற்றநிலையாம்
இறைவனடி முறைமுறையி னேத்துமவர்
    தீத்தொழில்க ளில்லர்மிகவே.

சம்பந்தர்.

அப்பரும்,

அட்டுமி னில்பலி யென்றென்
  றகங்கடை தோறும்வந்து
மட்டவிழுங் குழலார் வளைகொள்ளும்
  வகையென் கொலோ
கோட்டிய பாணி யெடுத்திட்ட
  பாதமுங் கோளரவும்
நட்டநின் றுடிய நாதர்நல்
  லூரிடங் கொண்டவரே.

திருநல்லூர் - திருவிருத்தம் 1.

அறைமல்கு பைங்கழ லார்க்கநின்
  றணியார் சடைமேல்
நறைமல்கு கொன்றையந் தாருடை
  யானுநல் லூரகத்தே
பறைமல்கு பாடல னாடல
  னாகிப் பரிசழித்தான்
பிறைமல்கு செஞ்சடை தாழநின்
  றுடிய பிஞ்ஞகனே. ஷை - 8

என்றனர்.

ஆகையால் இசைக்கு எழில்கொடுக்கும் தாளம், கைத்தாள முதலியவற்றால் * எழுப்பக்கூடினும், மிருதங்கமே மிகவும் சிறந்ததென இசைப்புலவர் பகர்வர். ஏனெனில் எவ்வகைத்தாளத்திற்கும் இயல்புக்கு விரோதமின்றி அமையக் கூடியது இக்கருவியேயாம்.

### (iii) தாளமும் அதன் பண்பும்.

தாளமென்பது யாது? இதன் இலக்கணம் இசை நூற்களினின்று நாம் அநுமானிக்க வேண்டுமேயன்றி, இதற்கு யாதொரு சூத்திரமும் கிடைக்கவில்லை. தாளமென்பது ஒருவகைக் கொட்டாட்டென எண்ணுதல் பாமரர் செய்கையாம். தாளமாவது "செம்முறையுறழ்பே மெய்ந்நிலை கொட்டல், நீட்டல், நிமிர்த்தல்" என்னும் வண்ணக் கூறுபாட்டைத் தழுவியதாம். இவற்றைத் தமிழில் வகுத்துக் காட்டிய "தாளவகையோத்து" என்னும் இசைநூல் அடியார்க்குநல்லார் காலத்தில் வழங்கியது நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் தாளம் நால்வகையென்றும், மூவகையென்றும்

* தாளம் கொடுக்கும் கருவிகள் முப்பத்தொன்று. அவை யாவன.

" பேரிகை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவி றடாரி
யந்தரி முழவொடு சந்திர வளைய
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளம் துடுமை சிறுபறை யடக்கம்
மாசில் தகுணிச்சம் விரலேறு பாகம்
உபாங்கம் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே "
[குறிப்பு "நாழிகைப்பறையை உரையிற் கொள்க]
இக்கருவிகள் பெரும்பாலும் மூவர் தேவாரங்களிலும் காணலாகும்.



வடமொழி திசைமொழிகளில் வழங்குவதுபோல், தமிழில் மனம்போன போக்காய் வழங்கவில்லை. இசைத் தமிழிலக்கணம், இயற்றமிழிலக்கணத்தை ஒட்டியதென்று முன்னரே கண்டோம். ஆகையால் தாளமும் அவ்வாறே யாம். பண்ணும், இசையும், மாத்திரையளவையா லமையப்படுவனபோல், தாளமும் மாத்திரையளவுகொண்டே பற்பல வகுப்புக்களாய்ப் பிரிக்கப்பட்டதாம். அரைமாத்திரையுடைய ஏகதாள முதலாகப் பதினறு மாத்திரையுடைய பார்வதிலோசனமீறாகத் தாளங்கள் நாற்பத்தொன் றென்பர் இசைவல்லோர். அரைமாத்திரையாவது கொட்டுதல். இதன் தொழில் அமுக்குதல். ஒரு மாத்திரையாவது அசையென்பர். அதாவது மிருதங்கத்தில் தாக்கியெழுதல். இரண்டு மாத்திரையாவது தூக்கு. இது எழுவகை * இதன் தொழில் தாக்கித் தூக்குதல். தாக்கியவோசை மூன்று மாத்திரை நேரே பெறுவது அளவெனப்படும். இவற்றையடிப்படையாய்வைத்தே, தாள வொரியல் வரும். இவற்றைப் பாணி, பாடல், தூக்கெனக் குறிப்பில் தேவாரத்திற் காண்கின்றோமன்றி விவரம் யாதும் நமது வாகீசப் பெருமான் வகுக்காததால், அவற்றின் இசைநிலை விவரம் கூறல் பயனிற் கூற்றாய் முடியும்.

* ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை
முச்சீர் துணிபு நாற்சீர் கோயி
லைஞ்சீர் நிவப்பா மறுசீர் கழாஅலை
யெழுசீர் நெடுந்தூக் கென்மனூர் புலவர்.

## ஆச்சரிய சூடாமணி

### 2. சூர்ப்பனகை அங்கம்

[170-வது பக்கத் தொடர்ச்சி.]

(அழகிய வேடங்கொண்ட சூர்ப்பனகை வருகிறாள்.)

சூர்ப்பனகை:—(வெறுப்புடன்) இதன்மேல் யான் அந்த இராமனையே திருப்திசெய்து கணவனாக்கிக் கொள்ளச் சென்றிடுவேன். அவன் உரைத்த சொல்லை உறுதி என எண்ணி "மூடனை யடைந்த கலைமகள் போல்" இலக்குமணனிடஞ் சென்று பேதையிற் பெரியளாய் நானு மடங்கினேன்! இதுவரையும் பர்ணசாலையி னருகில், அலியாய், நீதியற்றவனாய், பிறர்நோக்கம் கருதுங் கருணையிலனாய்க் கிடக்குமம் மனிதமிருகத்திற்காக வீணே காத்துநின்றேன். ஐயோ! கஷ்டம்! அபாக்கியவதியான யான் துயரத்தைத் தேடிக்கொண்டேன். இல்லை இல்லை - அவனுக்கு இவ்வளவுதான் பாக்கியம்; என்னைத் தள்ளிவிட்டா னல்லனோ. இருக்கட்டும்; அவன் தமையனிடம் சொன்ன பிறகு அறிவோம்.

இராமனும் சீதையும் வருகிறார்கள்.

இராமன்:—கண்ணே! எல்லாவற்றையும் வெகு தூரத்திலிருந்து கேள்விப்படுங்கால் வியப்பாக விருக்கின்றது, பக்கத்தில் வந்தால் ஒன்றுமில்லை. 'மலை போன்று உயர்ந்த யாக்கையும் மேகக்கூட்ட மொத்த கருநிறமு முடைய அரக்கர் பஞ்சவடியில் இருக்கிறார்களெனக் கேள்விப்பட்டு என்மனம் களிப்படைந்திருந்தது. இப்பொழுது அப்பஞ்சவடி நெடுநாள் வசித்தார்க்குரிய அழகிய நந்தவனம்போ லிருக்கின்றதே. மலை, காடு, கடல் ஆகிய இவைகள் கேட்போர்க்குமட்டும் வியப்பைக் கொடுக்கும் பொருளுடையனவன்றி நோக்குவார்க்கு அப்படியில்லை.

சீதை:—அரசகுமர! காட்டில் நாம் கண்டுகொண்ட நிகழ்ச்சிகளெல்லாம் வனவாசம் முடிந்து நம் தாயாரோடு அடிக்கடி சொல்லி வியப்புண்டாக்க எனக்கோ ஆவலிருக்கின்றது.

சூர்ப்ப:—(நெருங்கி) ஐய! ஜயமுண்டாகுக.

ராம:—சுந்தரீ! நீ இலக்குமணனைக் கண்டனையா?

சூர்ப்ப:—ஆம்—கண்டேன்.

ராம:—நான் சொன்னதைக் கேட்டானா!

சூர்ப்ப:—கேட்பதே செய்தான்.

ராம:—மற்று, என்னசொல்லி உன்னைத் தள்ளினன்.

சூர்ப்ப:—'முனிவரர் தன்மைவாய்ந்த இராமனது தொண்டனை எனக்கு, அதற்கு மாறாயிருக்கும் உன்னால் யாது பயன்' என்றே...

ராம:—(முறுவலுடன் தனக்குள்) இவ்வார்த்தை அவனுடையதாகவே யிருக்கவேண்டும். (வெளிப்படை) மங்களமுடையவளே! உன்னை இன்னும் ஒரு முறை துன்புறுத்த நினைக்கின்றேன் யான்.

சூர்ப்ப:—கூடாது கூடாது, தாங்கள் இவ்வாறு சொல்லக்கூடாது; தங்கள் திருவடித்தொண்டுசெய்து கொண்டு இங்கேயே இருப்பேன்.

சீதை:—பாவம் இவள் தங்களிடமுள்ள அன்பால் தனக்குள்ள குறைபிமானத்தைக் காட்டுகின்றாள்.

ராம:—அழகிய முகமுடையவளே! உன் முயற்சியை யானும் விரும்பவேண்டியதே—ஆனால், தந்தை கட்டளைப்படி வசிட்டமுனிவர் கொடுக்க, அக்கினி சாக்ஷியாகப் பெற்றுத் தர்மத்தைச்செய்யக் கைப்பிடித்த இச்சீதையே இப்பொழுது, வீட்டையத் தடையா யிருக்கின்றாள் என்று எனக்குத் தோன்றுகின்றதே. இனிமேல் எண்ணவேண்டியதை நீயே நினைத்துக்கொள்.

சூர்ப்ப:—ஆயின், ஐய! வேறிடம் போகலாற்றேன். இவ்விடமேயிருந்து என் உயிரை விடுவேன்.

சீதை:—ராஜகுமார! இவளுடைய முயற்சியை அலக்ஷியஞ் செய்யலாகாது.

ராம.—பெண்மணி! நீ பின்னுமோர் முறை லக்ஷ்மணனிடம் போக வேண்டுகிறேன்.

சூர்ப்ப:—சிவசிவ! இது இயலாது. தங்களுடைய சொல்லைநம்பி நான் பெண்மையையும் கைவிட்டேன்.

ராம:—அம்ம! அப்படியில்லை; இது பொதுவான வழக்கமே. கங்கையாறானது தன்னைப் பேணும் பரமசிவனுடைய சடையில் சிறிதுபொழுது மாலையாக இருந்து பிறகு, தன்னைப் பேணாத நதிபதியான கடலை

நோக்கிச் செல்லவில்லையா? அதுபோல ஆடவரை நோக்கி வலிந்து செல்லுதல் பெண்பாலருக்குத் தகாதென நினைக்கவேண்டா.

சூர்ப்ப:—தங்க ளடியாளான யான் எதைத்தான் செய்யமாட்டேன்; எதையும்செய்வேன். (தனக்குள்) ஆகட்டும்; இவன் இப்பொழுதும் என்னைத் தள்ளிவிட்டுக் கருணையற்றிருப்பானாயின் பிறகு என் இயற்கையைக் காட்டுவேன் (போயினள்.)

சீதை:—நாத! தாங்கள் இரங்குதற்குரிய இச் சிறுமியைப் புறக்கணிப்ப தெனக்குவருத்தம்விளைக்கிறது.

ராம:—கண்மணி! தான்தோன்றியாகத் திரிகின்ற பெண்பாலார் இல்வாழ்வாருடன் சேரத்தக்கவரல்லர்.

சீதை:—எனின்; நம்பத்தகாத அவளை ஏன் குமரனிடம் அனுப்பினீர் ?

ராம:—இலக்குமணனுக்கு அவளுடன் சேர்க்கை ஏது? இது, அவளை யான் அகற்றுதற் கேற்ற சூழ்ச்சி.

சீதை :—கஷ்டம்! இளையவனுங்கூடத் தள்ளிவிட்டால் அவளுக்குக் கதி என்ன?

ராம:—(சீதையைப்பார்த்து) நங்காய், அஃதெல்லா மாகுமா றுக! ஈளினச் சீறடி சிவக்க நடக்கின்றாய் நீ. தண்ணீ ரல்லா லுண்ணற் கில்லை. வெறுந் தரையிற் படுக்கின்றாய். குளிர்நீர் குளிப்பதல்லால் கோலம் பிறிதொன்று நீ கண்டிலை. என்றாலும், அயோத்தியிற் போலவே இங்கும் உன் அழகினால் என் கண்களைக் கவர்கின்றாயே; ஆச்சரியம்.

சீதை:—(தனக்குள்) முனிவர் மனைவியான அநுசூயை விடைகொடுத்து ஆசிரமத்திலிருந்து என்னை அனுப்பும்போது, 'உன் உறுப்புக்களெல்லாம் நின் கணவனுடைய பார்வைக்கு அழகாகவே யிருக்கும்' என்று கொடுத்தருளியவரம்இவருக்குத்தெரியாதோ?

திரைக்குள்—நில், நில்; அடீ அரக்கீ, நில்.

ராம:—(கேட்டு) இலக்குமணனுடைய குரல்போலிருக்கின்றதே !

சீதை:—ஆம்; அவனுடையதுதான்.

பிறகு உறையிலிருந்து உருவிப் பிடித்தவாளுடன் இலக்குமணனும், தன் இயற்கை யுருவத்துடன் சூர்ப்பநகையும் வருகிறார்கள்.

இலக்கு:—நில், நில்; அடீ அரக்கீ நில்.

ராம:—இலக்குமணா, இஃதென்ன ! பயங்கரமான வீரப்பல்லும், செக்கர் நிறத்தில் மேல்நோக்கிய தலைமுடியும், மலையொத்த உடலும், நீருண்டமேகநிறமுங் கொண்ட இவ்வுருவம், தாடகையைக் கொன்றவனுக்கே தன்னை யறியாத பயம் விளைவிக்கின்றதே.

சீதை:—ராஜபுத்திர ! தடுக்கவேண்டும், தடுக்கவேண்டும். விரைவிலிவ் வரக்கியைத் தடுக்கவேண்டும்.

ராம:—பெண்ணே ! பயப்படாதே ! பயப்படாதே! என்ன ! சுவரில் எழுதியிருக்கும் பேய்களின் சித்திரம் பார்த்ததில்லையா நீ?

சீதை:—மனமே! இதென்ன! இதோ சக்கரவர்த்தி திருமகன் அருகிருக்க நீ ஏன் நடுங்குகின்றாய்!

சூர்ப்:—தின்பதற்கிருந்தும் முனிவருடைய ஊனைத் தின்று வெறுத்து இப்பொழுது பசித்திருக்கிற எனக்குப் பாக்கியத்தினால் கொழுகொழுப்புடன் மெதுவான உணவுப்பொருள்கள் வலுவிற் கிடைத்தன. ஆகட்டும், இவர்களைத் தின்றபிறகு சீதையை என்முன்னோன் இராவணனுக்குக் காணிக்கையாக வைப்பேன் யான். (ஓடுகிறாள்)

இலக்.—இதோ இவள் மேகமண்டல மெட்டும்படி உடலை வளர்த்துக் கைகளைத் தூக்கிக்கொண்டு தாழ்கோல்திறந்த கோட்டைவாயில்போலப் பேழ்வாயுடன், பூமி மேடுபள்ளமுற்று நெளிய நடந்து நம்மை நோக்கி ஓடிவருகின்றாள்.

ராம:—இதோ இவள், வானத்திலெழுந்து பூமியிலிறங்கிச் சுழல்கின்றாள் ; ஓடுகிறாள் ; வாயைப் பிளக்கின்றாள் ; வாள்போன்ற கூரிய நகங்களால் வானத்திலுள்ள மேகங்களைக் கிழிக்கின்றாள்.

சீதை:—காக்கவேண்டும் ; காக்கவேண்டும்; அரக்கியைத் தடுத்தென்னைக் காக்கவேண்டும்.

(இராமனது கரங்களைப் பற்றிக்கொள்கின்றாள்)

ராம:—அஞ்சேல், அஞ்சேல் ! வெண்தாமரை முகமுடையாய், அஞ்சேல் ! இவள் அரக்கியல்லள், உள்ளே ஒன்றுமில்லாத ஓர் யந்திரம்; என் பாணம் சிறிது படும்பொழுது கூக்குரல் மேலெழ இவள் கீழ்விழுவாள்.

இலக்:—ஐய் அருள்புரிக! நானே இவளைத் தடுக்கின்றேன். (உள்ளே போகின்றான்)

சூர்ப்:—ஐயோ! ஐயோ! பயமாயிருக்கின்றதே ! எனக்கு இரையாய இவர்கள் கொடுமைசெய்யத் தொடங்கிவிட்டனரே.

இலக்:—ஐயோ ! பிடித்துவிட்டனளே என்னை. மோசம் போனேனே.

ராம:—அடீ அரக்கீ நில்; தீமை புரிவார்பால் யாம் தவசிகள்போல் தாழமாட்டோம். படபடப்பை விட்டுவிடு; இதோ கையில் வில்லெடுத்து விட்டேன் ; அரக்கரிடத்தில் எமது ஆயுதங் களெப்பொழுதும் கருணையற்றவை யென்று நினை.

சூர்ப்:—கன்மனதுடைய இவனையே முதலில் ஒருவருமில்லா இடத்திற் கொண்டுவைத்துத் தின்பேன்; (இலக்குமணனைத் தூக்கிக்கொண்டு வானத்திலெழும்பி) ஆயிற்று ; மலைச்சிகரங்கள்கூட இலேசாய் விட்டனவே. (போனாள்)

ராம:—(வருத்தத்துடன்) மாதே, மான் விழியாய்! இப்போதும் பெண்குணத்தை விடவில்லையே நீ; இவ்வரக்கி தன் கைகளில் இலக்குமணனைத் தூக்கிக்கொண்டு மேலே கிளம்புகின்றாள். தைரியத்தைக் கைக்கொண்டு, பயத்தையு மென்னையும் போகவிடாயோ, இனி !

சீதை:—அரசகுமர! என்னைக் காப்பவர் யார்?

ராம:—மற்று, அச்சிறுவனை யார் காப்பாற்றுவார்?

சீதை:—அவன்கையில் ஆயுத மில்லையா!

ராம:—(வருத்தத்துடன்) அரக்கியின் கையிலகப்பட்ட அவனுக்கு ஆயுதங்களாற் பயனென்ன! இப்பூமியில் நான் இங்குப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே அவனைக் கையிற் தூக்கிக்கொண்டு விசும்பேறி விட்டனளே ! ஐயகோ! தரையிலேயே திரியவல்ல இம்மானுடப் புன்பிறவியால் ஏது பயன் !

சீதை.—(வருத்தத்துடன்) பாவியான யான் தங்களைத் தடுத்ததால் குழந்தை இலக்குமணனுக்கு மனப்புண் விளைவித்தேனே.

ராம:—(அம்பொன்று உருவிக்கொண்டு) சிறப்புடைய அம்புகளில் எதை இவள்பாற் செலுத்தலாம்?



(திரைக்குள்) ஐயோ ! என்னை வீழ்த்திவிட்டான்; ஐயா! அடைக்கலம்.

ராம:—ஆ! பெண்குரல்போல விருக்கின்றதே! இப்பூமியினதிர்ச்சி ஏதனாலுண்டாயிற்று; இலக்குமணன் அவ்வரக்கியைத் தள்ளிவிட்டான், திண்ணம்.

சீதை:—நானு மப்படியே நினைக்கின்றேன்.

ராம:—கையைப் பிடித்துக்கொண்டு என்னுடன் வா, நான் இலக்குமணனைத் தேடவேண்டும்.

சீதை:—எளியனேன் தளர்கின்றேன். (இருவரும் நடந்து சுற்றிப்பார்த்தனர்.)

ராம:-மேலிருந்து விழுகின்ற இங்குலிகம்கலந்த நீர்ப்பெருக்குக் கீழிருக்குங் காட்டிற்குள் பெருகுகின்றதோ ? அல்லது மேகங்கள் உற்பாதமாகச் செந்நிற இரத்தத்தைப் பொழிகின்றனவோ ?

இலக் :—(இரக்கத்துடன் வருதல்) கஷ்டம்! பெண்ணென்று பெயர்வைத்துக்கொண்டவளிடம் முதன்முதலில் ஆயுதமெடுத்த விது எனக்கே வெறுப்பாயிருக்கின்றது. இல்லை ; ஆனால் அதை நினைத்து வருந்துவதற்கில்லை. அவளுடைய கெட்ட நினைப்பைக்கண்டும், தமையனுடைய தீர்மானத்தைத் தெரிந்தும் அரக்கியின் காது மூக்குகளை ஒருவாறு அறுத்தெறிந்தேன்; ஐயனிடம் செல்கின்றேன். (நடந்து சென்று) ஐய ! ஜய முண்டாகுக !

ராம:—(தழுவின பிறகு) மனமே! இப்பொழுது இலக்குமணன் நீதொன்றுமின்றியிருக்கின்றான். இவனுடன் அயோத்திலிருப்பதுபோலவே இக்காட்டிலும் களிப்புட னிருக்கின்றேன்காண். ஆதலால் மனனே, இனி நீ அமைதியடை (மீண்டும் தழுவி) குழந்தாய் ! அரக்கி எங்கே?

இலக்:—(தனக்குள்) ஏதென்று யான் இயம்புகேன் ! (தலைதாழ்த்தி நிற்கின்றான்)

கூக்குரலுடன் சூர்ப்பனகை வருகிறாள்.

சூர்ப்:—ஐயோ அண்ணா இராவணனே ! ஐயோ கும்ப கர்ணனோ ; ஐயோ ஐய விபீஷணனே ! உய்யேன் உய்யேன் நுந்தங்கை, முனிவர் வேட மாநடரால் நைவே னென்னைக் காவீரோ! நானே இங்கு என்செய்வேன்.

ராம:—இலக்குமணா, பார். செக்கர்வானங் கலந்த மேகவரிசை போலவும், செந்நிறக் காவிக்கற் கசிவு கொண்ட மலைச்சரிவு போலவும், இளம்வெயிற் பட்ட புன்கமரச் சோலைபோலவும், இவ் வெல்லரக்கி காண்கின்றாள், பார்.

இலக்:—(தனக்குள்) வெறுப்புறு இச்செய்கையை என் நாவா லுரைக்காமல் நல்வினைப்பயனால், அண்ணன் தானாகவே யறிந்துகொண்டான்.

ராம:—இலக்குமணா, நன்று செய்தாய் ! பெண்களைக் கொல்வதற்குப்பதிலாக இதுவே தக்க தண்டனையாகும். கரதூடணதிபர் தமக்கையும், இராவணன் தங்கையும் தண்டகவனத்தில் வாழுபவளுமான சூர்ப்பனகை இவளே !

சூர்ப்:—மானிடரே! நீங்கள் செய்த இத்தீச்செயல் நினைவிருக்கட்டும்; அதன் பலனை இன்றுமுதற் காண்பீர்கள்.

இலக்:—சீ ; அடி, போ, போ !

சூர்ப்:-கரதூடணதியரென்னிலையைக் காணட்டும். (போனாள்)

சீதை:—ஆரியபுத்திர! இப்பொழுதே எனக்கு உயிர்ப்பு வருகின்றது ; இருந்தாலும் இவ்விதச் சழக்கியர் திரியும் பயங்கரமான இக்கொடிய காட்டில் மிக்க அழகுடைய அம்மெல்லியல் எப்படி வாழ்கின்றாள்.

ராம:—(இலக்குமணனைப் பார்க்கிறான்)

இலக்:—(காதில்) இப்படி யெல்லாந் தான்.......

சீதை:—இளையவன் என்ன சொல்கின்றான்.

ராம:—பேதாய்! துடிக்கின்ற இதழுடன்கூடின முகமும், கெண்டைபோற் பிறழும் கண்களும், தனபாரந் தாங்காது துவண்டு வணங்கும் இடையும், பரந்த அல்குற்றடமு முடையவளாய் முன், வெள்கியும் அஞ்சியும் ஓரடித் தடத்தில் ஒல்கியொல்கி நூறடிவைத்து நடந்த அப்பெண்ணே அரக்கரை வெறுக்கும் கடவுளின் வலிமையால் உன் பயத்திற்குக் காரணமானாள்.

சீதை:—பொய், இது பொய்யே !

ராம:—இலக்குமணன் சொல்கின்றானே !

சீதை:—ஐயோ அவளிடம் எனக்கு நம்பிக்கையிருந்தது. நல்லவேளை தாங்களதைப் போக்கினீர்.

ராம:—குழந்தாய் இலக்குமணா! முதலில் அவளை எவ்வாறு நீ கண்டுபிடித்தாய் ?

லக்ஷ்:—(முறுவலுடன்) கண்ணோட்டத்தால் ஓரிடத்தும் குற்றம் தெரியவில்லை ; எனினும், தீயின் வெம்மை எப்படி மறையும்?

ராம—அது சரியே ! வேருடன் பிடுங்க விரும்புவார்க்குத் நீங்கியற்றாத முள்ளற்ற கொடிகள் வசமாவதுபோலக் கண்ணோட்டத்தால் மென்குணமுடையவர்களை மூடர்கள் தம்வச மாக்கிக்கொள்கின்றனர். பொதுவாகப் பெண்ணென்று நினைத்து அவமானஞ் செய்யத்தக்க வளல்லள் ; அப்படியிருக்க ஒருவராலும் செயற்கரிய செய்கையையன்றோ செய்துவிட்டாய்.

லக்ஷ்:—(வெட்கப்படுகிறான்)

சீதை:—இப்பொழுதும் அரக்கியவள் என்முன் தெரிவதுபோல் தோன்றுகிறது.

ராம:—மூவுலகுப் பகைவனான இராவணன் இவளுக்குத் தமையனாயின். இவ்வில்லுக்கு இளைப்பாறுதலென்பது இனியில்லை. அரக்கியிவளுடன் கொண்ட இப்பகை பெரும்பாலும் அரக்க ரனைவரையுங் கொல்லுமோர் உலக நன்மைக் காகுக.

சீதை: —ராஜகுமாரா, பார்! சூரியன் மாலைக்காலத்துத் தன் செங்கிரணங்களால் அரக்கியின் இரத்தச் சேற்றை வாரியெடுத்து மரங்களின்மேற் பூசுகின்றானே. பார்.

ராம·—குழந்தாய் இலக்குமணா! மாலைவந்துவிட்டது; வாளை உறையி லிடு; வில்லின் நாணைச் சிறிது தளர்த்திவிடு. தெளிந்து குளிர்ந்த நீரிற் குளித்துக் குளிர்ந்த சரீரத்துடன் பிராணாயாமம் ஜபம் முதலியன செய்து மாலைக்கடனை முடிப்போம்.

லக்ஷ்:—தங்கள் கட்டளைபோலவே. (செய்தல்)

ராம:—மதிமுகியே ! இதோபார் ; சூரியன் செம்பருத்தி மலர்போன்ற சிவந்த தன் கிரணங்களால், சக்கிராயுதன் தன் கால்கொண்டு நமுசியென்னும் அசுரனை உதைத்துத்தள்ள, அவன் வானத்திலிருந்து விரைவாக விழும்போது, அவனிடமிருந்து பெருகிப் பாயும் இரத்தத் திவலைகளால் திசையனைத்தும் சிவந்தனபோல செந்நிறமாக்கினான். (எல்லோரும் போதல்)

(சூர்ப்பநகை அங்கம் முற்றிற்று)

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[168 - வது பக்கத் தொடர்ச்சி.]

### நடத்தை (Behaviour)

இயற்கைச்செய்கை நிலையினது வரலாற்றினையும் ஆராய்தல்வேண்டும். ஒவ்வோர் இயற்கைச் செயனிலையும் சிறுகச்சிறுக வளர்ந்து முற்றுகிறது. பூச்சிகளிடம் இவ்வளர்ச்சியைக் காண்பது அரிது. முட்டையிலிருந்து வெளிவந்ததும், அவை தம் இயற்கைச் செயல்களைச் செய்யத்தொடங்குகின்றன. எனினும் குளவிபோன்ற சில பூச்சிகளிடத்தே இயற்கைச் செயனிலை சிறுகச்சிறுக வளரக் காண்கிறோம். இவ்வாறு வளரும் காலந்தான் உயிருளியின் இளமை எனப் பேசப்படுகின்றது. குளவி முட்டையிடுவதற்கு முன், இடவாராய்ச்சி செய்வதனை முன்னரே கண்டோம். அதுபோது, அஃது உணவையே நாடிநிற்கின்றது. பின் தன் வளைக்குள் எந்த உயிருளியை இரையாகக் கொண்டுவந்து அடைக்கப்போகின்றதோ அதனை அவ் விளமைப்பருவத்தில் அது தொடுவதில்லை. சிலந்தியை இரையாக வைக்கப்போகின்ற குளவி, தன் இளமைப்பருவத்தில் சிலந்தியைத் தொடுவதில்லை. ஏன்? இயற்கைச்செயனிலை இன்னும் முற்றவில்லை என்பது விளங்கவில்லையா?

இயற்கைச் செயனிலைகள், முற்றி வளர்ந்தபின் சிறிதுபொழுதுவரையில் கிளர்ச்சியுறாமற்போனால், அவை மறைந்து விடுகின்றனஎன்பர் ஒருசாரார். பின்னர் அவற்றை இயக்குவது அருமையினும் அருமை. கோழிக்குஞ்சு தன்தாயைப்பின்தொடர்ந்துசெல்வது இயற்கைச்செயலாம். இவ்வாறு பின்தொடரும் இயற்கைச் செயனிலை 6 அல்லது 7 நாளுக்குள் முற்றி வளர்கின்றது. அப்போதே அதனைப் பயன்படுத்திப் பயிற்சியால் வழக்கமாக மாற்றிக்கொள்ளாமற்போனால், அது மறைந்து போகின்றதாம். 8 அல்லது 10 நாள் வரை ஒரு குஞ்சு தன் தாயைப் பாராமலே வளருமானால், பின்னர்த் தாயைக் கண்டபோது, பின் தொடர்ந்து போவதில்லை. தாயென உணர்வதும் இல்லை. குழந்தைகள், பிறந்த சில நாள்களுக்குள், தாய்ப்பாலை நன்றாகக் குடிக்கின்றன. சிலநாள் வரை தாய்ப்பால் தாராது, பாலிடை கொண்டே போட்டி வருவோமானால், தாய்ப்பால் சுவைக்கும் இயற்கைச்செயல் மறைந்து போகின்றது. பின்னர் எவ்வளவு வற்புறுத்தினாலும் அக்குழவி தாய்ப்பால் குடிக்கப் பழகுவதில்லை. நாயானது உண்டு மிகுந்த பொருளைப் புதைத்துவைப்பது இயற்கை. ஐந்து அல்லது ஆறு திங்களில், இவ்வியற்கைச் செயனிலை முற்றுகின்றது. பாய்கள் பரப்பிய கல்வீட்டில் அந்நாயை வளர்த்தால் அவ்வைந்தாறு திங்களில், அவ்வியற்கைச்செயலைச் செய்ய முந்துகின்றது. நிலத்தைத் தோண்டுவதுபோலப் பாயைக் கால் உகிரால் கீறுகிறது. பாய்க்குள்ளே கைத்துணி முதலியவற்றை ஒன்றுசேர வைக்கின்றது. இவ்வாறு 5 அல்லது 6 முறை செய்தபின்னர் அவ்வாறு செய்வதை நிறுத்திவிடுகிறது. பயனிலாச் செயலை எத்தனைமுறை செய்வது கூடும்? அவ் வியற்கைச்செயலை அடியோடு மறந்துவிடுகின்றது. கல்வீட்டிற்கு மாறாகக் காட்டு மண்ணும், கைத்துணிக்கு மாறாகப் புலால்துண்டும் எதிர்ப்பட்டிருந்தால், இச்செயற்கை நிலை, பயிற்சியால் வழக்கமாக மாறியிருக்குமன்றோ. இவற்றைக் கண்டுணர்ந்த பெரியோர் இயற்கைச்செயனிலை நிலையானதன்று என்று முடிவுகட்டி, இயற்கைச்செயனிலையின் நிலையாமையை வற்புறுத்தினர். இயற்கைச் செயனிலை கிளர்ச்சியுற்றபோது பயிற்சியால் வழக்கமாக மாறிவிடுகின்றது. அம் மனநிலை மாறியபோதும், வழக்கம் நிலைபெற்று நிற்கின்றது. ஆதலினால் அம் மனநிலை முற்றியபோதே அதனை வழக்கமாக மாற்றியமைத்தால்தான் நமக்குப் பயன்படும்.

ஆனால், இயற்கைச் செயனிலை அனைத்தும் இத்தகையன அல்ல. குருகின் (அன்னம், வாத்து) சிறகை அரிந்[illegible] நீரில்லாத இடத்தே வளர்த்து வருகின்றோம். பலநாள் சென்றபின் [illegible] நீர்நிலையைக் கண்டால், நீந்த ஓடுகின்றது. அவ்வியற்கைச் செயனிலை மறையக்காணோம். பறந்து திரியும் பறவை பலவற்றைச் சிறுபொழுதிலிருந்தே எத்தனைமக்கள், சிறகரிந்து கூட்டில் வளர்க்கின்றனர். பல ஆண்டுகள் சென்றபின், ஒருநாள் சிறகரிய மறந்து விடுவார்களானால் அவை பறந்தோடிவிட வில்லையா? வீட்டில் பழகிய விலங்குகள், பிறந்ததுமுதல் சிங்கம் என்பதனை அறியாமலே வளர்கின்றன. முதுமை யடைந்தபோது சிங்கத்தின் உருமுதல் கேட்டாலும், அவை அஞ்சி நடுங்கக் காண்கின்றோம். இத்தனை ஆண்டுகளாகியும் இவ்வியற்கைச்செயனிலை ஏன் மறையவில்லை. ஆதலின் இயற்கைச்செயனிலையின் நிலையாமை உண்மையன்று.

இயற்கைச்செயனிலைதான் ஒருயிருளியின் சிறப்புநிலை. அதன் இயற்கைச்செயனிலை யனைத்தும், கிளர்ச்சியுறுதபோது, அவ்வுயிருளி ஓங்கி வளருவதில்லை. அரைகுறையாக அதன் உள்ளநிலை அழிகின்றது. இதனால் அன்றோ காட்டில் வாழ்வனவற்றை வீட்டிற் பழக்குவது அருமையாகின்றது. இயற்கைச் செயனிலைதான் உயிருளியின் உயிர்நிலை எனலாம். அஃதே நடுநிலை. அதன் உறுப்பு, நிறம், வடிவு, அமைப்பு, முதலியன வெல்லாம், அவ்வியற்கைச் செயனிலைக்கு அடிமையாய் விளங்குவனவே யாம். அதற்குத் தக்கவாறு அமைந்தனவேயாம். கூர்ந்த மலர்ச்சித்தோற்ற முறையில் (Evolution) இதனுண்மையை நாம் அறிகின்றோம். இங்குக் கூர்ந்த மலர்ச்சியாவது யாது? இவ் வியற்கைச்செயனிலைகள் வேறுவேறாகப் பல்கிப் பிரிகின்றன. இதனைப்பிரிநிலையுறுதல் எனலாம். இயங்கு துறையிலும் உணர்வுத்துறையிலும், பலவகையாகக் கிளர்ச்சியுறும் செயனிலைகள், தனித்தனி ஒவ்வொரு வழியாகக் கிளர்ச்சியுற்று இயங்குகின்றன. இதனைச் சிறப்புநிலையுறுதல் எனலாம். இவ்வாறு பிரிநிலையுறுதலும் சிறப்புநிலை யுறுதலுமே உலகமலர்ச்சி முறையாம். முட்டையிட்டும் அடைகாத்தும் வருகின்ற பறவைகளில் சில முட்டையிடுவதிலேயே சிறந்து விளங்குதலையும், சில அடைகாப்பதிலேயே சிறந்து விளங்குதலையும் கண்டோம். ஈதே பிரிநிலை யுறுதல். குளவிகள் எத்தகைய இரையைக் கண்டாலும் தேடியெடுக்கக் கூடியவை. ஆனால், அவற்றில் சில எரிப்புழுவொன்றைத்தான் இரையாகத்தேடத் தொடங்குகின்றன, சில சிலந்தியைத்தான் தேடுகின்றன; ஈதே சிறப்புநிலை யுறுதல். கொம்புள்ள கால் நடைகளும் கிளைக்கொம்புள்ள மான்களும் கொம்புகள் இருத்தலாலோ சண்டையிடுகின்றன? அன்று, அன்று. போரிடும் தமது இயற்கைச்செயனிலைக்குப் பயன்படுமாறு அவற்றிற்குக் கொம்புகள் முளைக்கின்றன. புலாலுண்ணும் விலங்குகளுக்கு, உகிரும் பல்லும் கூரியனவாய் நன்கு வளர்ந்துள்ளன. இவை வளர்ந்தபிறகு அவை புலாலுண்ணுவனவாக மாறவில்லை. புலாலுண்ணும் இயற்கைச்செயலை நோக்கி இவ்வாறு மாறி வளர்ந்தன. இவ்வாறு வளர்வதுதான் மலர்ச்சித்தோற்றமுறை என்பதாம்.

இரண்டு மூன்று இயற்கைச்செயல்நிலைகள் ஒரே பொழுதில் கிளர்ச்சியுறலாம். அவை ஒன்றற்கொன்று மாறுபடாமல் இருந்தால் கலப்புற்று விளங்குகின்றன. மாறுபட்டு நின்றால் இரண்டிற்கும் போர் நிகழக் காணலாம். இரண்டின் செயல்களும் மாறிமாறி நிகழும். கடையாக, இரண்டில் ஏதேனும் ஒன்று வெற்றிபெறும். ஒரு இயற்கைச் செயனிலை கிளர்ச்சியுற்றபோது மற்றொன்றும் கிளர்ச்சியுற்று முன்னதை நிறுத்திவிடலாம். அவ்வாறு தடுக்குமானால், முன்னதைவிடப் பின்னது வலியுடையதெனச் சொல்லவும் வேண்டுமோ?



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய் மொழி.

[174-வது பக்கத் தொடர்ச்சி]

### முதற் பத்து.

**9-ம் பாசுரம்.**

உளனெனி லுளனவ னுருவமிவ் வுருவுகள்
உளனல னெனிலவ னருவமிவ் வுருவுகள்
உளனென விலனென விவைகுண முடைமையில்
உளனிரு தகைமையொ டொழிவிலன் பரந்தே.

அவதாரிகை:—இதுவரையில் வேதப்பிரமாணத்தால் தாம் உரைக்கும் தத்துவங்களை நிலைநிறுத்தினர். இப்பாசுரத்தில் சர்வசூனிய வாதத்தை யுக்தியால் கண்டனம் செய்து, வேதத்தில் சொன்ன "அஸத்து வா இதமக்ர ஆஸீத்" என்பதில் "ஸத்" "அஸத்" என்கிற பதங்களுக்கு "உருவம்," அதாவது ஸ்தூல தசையில் நாம ரூபங்களோடு உள்ள வஸ்துக்கள் என்றும், "அருவம்" நாம ரூபமின்றிச் சூக்ஷ்ம தசையில் புலப்படாது நின்றவைகள் என்றும், பிரம்மம் ஒருக்கால் பிரளயத்தில் நாமரூபமின்றிச் சூக்ஷ்மமாய் நின்றதென்றும், வியஷ்டிதசையில் நாமரூபங்களோடுகூடி அவயவியாக ஜகத் தோன்றிற்று என்றும், அர்த்தம் கூறுகிறார்.

#### பதவுரை.

உளனெனில்-இருக்கிறானென்றால், உளன்-"இருக்கிறான்" என்கிற விசேஷணத்தோடு இருக்கிறான்—("பகவான்" என்பதுதொக்குநிற்கிறது). 'உளனலன்' எனில் - இல்லை என்றால், "இல்லை", தத்காலத்தில் தத்தேசத்தில் தத்வர்த்தமான தசையில் "இல்லை" என்கிறவிசேஷணவாக்கிய இலக்காய்க்கொண்டு அவன் இருக்கிறான் என்றும் ஆகும். இவ்வுருவுகள் - தேவ மனுஷியாதி ரூபங்களான வஸ்துக்கள், அவன் உருவம் - அவன் பரிணமிக்கும் பிரகாரங்கள்; இவ்வுருவுகள்-இந்த நாமரூப மில்லாத சூக்ஷ்ம வஸ்துக்கள் யுகப்பிரளய தசையில், அவனுருவம் - அவன் இல்லை என்கிறதசை. சித் அசித் வஸ்துக்கள் பிரளய தசையில் சூக்ஷ்மமாயிருக்கின்றன - அதுவே ஈசுவரனுக்கு "நாஸ்தி"த்துவ தசை. "உளன் என இலனென—"உளன் என்றும் இல்லை என்றும் சொல்லப்படுகிற, "இவை குணம்"—இருக்கிறது இல்லை என்கிறது இந்தக் குணங்கள்; "உடைமையில்" - உடையவன் என்று சொல்லப்படுகிறதாகையாலே; "இரு தகைமையோடு"-இப்படி இருக்கிறது இல்லை என்ற இரண்டு தர்மங்களோடு-ஸ்தூலசூக்ஷ்ம விபாகங்களோடு; - பரந்தே - வியாபித்து; ஒழிவிலன்- எப்போதும் விடாமல் உளான். [இவ்வருட, 4-வது இதழில் 67-வது பக்கத்தில், திருவாய்மொழி - சில தத்துவம், என்ற தலைப்புடன் எழுதியிருப்பதை இங்குச் சேர்த்துப் படித்துக் கொள்ளவும்.]

**10-ம் பாசுரம்:—**

பரந்ததண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்
பரந்தவண் டமிதென நிலவிசும் பொழிவறக்
கரந்தசி லிடந்தொறு மிடந்திகழ் பொருடொறும்
கரந்தெங்கும் பரந்துள னிவையுண்ட கரனே.

#### பதவுரை.

இவையுண்ட - இந்த ஜகத்தைப் பிரளயகாலத்தில் ஸம்ஹரித்தவனை; கரன்-பிரமாணங்களால் கெட்டியாய், அதாவது திருடமாய், ஏற்பட்ட பரமன்; பரந்த அண்டமிதென—இது பரந்த அண்டமென; இருப்பது; இது - இந்த அணுவானது "பரந்த அண்டமென" - விஸ்தாரமாகிய அண்டமென்னும்படி, பரந்த-விஸ்தாரமாயுள்ள, தண் - சீதளமான, பரவையுள் - சமுத்திரத்தினுள், அதாவது யுகப்பிரளய ஜலார்ணவத்துள்; நீர் தோறும்-ஒவ்வொரு ஜல பரமாணுக்கள் உள்ளும், பரந்துளன் - வியாபித்துளன்.

விசும்பு-பூமி ஆகாசங்களில், அதாவது ஸர்வலோகங்களிலும் நடைபெறுவதாய், ஒழிவற-இடைவீடில்லாமல், கரந்த - ஒளிந்து வியாபித்திருக்கிற, சிலவிடந்தோறும்-அதியல்பமான ஸ்தலந்தோறும், அல்லது கொதுகுபோல் உள்ள அதிசூக்ஷ்மமான சரீரத்திலும், ('பரந்துளன்' என்பது தொக்கு நிற்கிறது) இடம் திகழ்-அசையாப்பொருள்களி னுள்ளே ஸ்வயம் பிரகாசமான சூக்ஷ்மமான ஆத்ம வஸ்துக்களாய், பொருடோறும் - அந்த ஆதம வஸ்துக்கள்தோறும், எங்கும் பரந்து - எல்லாவிடத்திலும் வியாபித்து, கரந்து - மறைந்து; பரந்துளன்—விஸ்தரித்துளான்.

விபுவாய் - பெரியதாய், அதாவது, பிரம்மாண்டத்தை ஏகதேசமாய் நிறைந்து வியாபிப்பதுபோல் ஒவ்வொரு திவலை ஜலசூக்ஷ்மத்திலும் அநாயாசமாய் உள் ஒளித்துச் சம்பூர்ணனுயிருக்கிறான் என்று கருத்து. விபுவும் அவன், அணுவும் அவன் என்றாயிற்று.

பொழிப்புரை :— சமுத்திர ஜல பரமாணுவிலும் பிருதிவி ஆகாசம் அகப்பட உள்ள நடு தேசத்திலும் அதி சூக்ஷ்மமாயிருக்கிற அசித் வஸ்துகளிலும் வியாபித்து, அந்த அசித்வஸ்துகளில் வியாபித்திருக்கும் சூக்ஷ்ம வஸ்துக்களான ஜீவாத்மாக்கள் அனைத்திலும் சங்கோசமும் ஒப்புமில்லாமல் புகுந்து வியாபித்துப் பிறருக்குத் தெரியாவண்ணம் ஜகத்துக்கு ஆத்மாவாய்நின்று அதை யுகமுடிவில் ஸம்ஹரிக்கிறானென்று, வேதப் பிரமாணங்களால் திருடசித்தனை பரமபுருஷன் திருவடிமலர்களைத் 'தொழுது எழு'' என்று தம் திருவுள்ளத்துக்குக் கூறுகிறார். முதல் பாட்டின் இறுதியை இத்தசகத்தில் எல்லாப் பாசுரங்களுடனுஞ் சேர்த்து அந்வயித்துக்கொள்ள வேண்டும்.

11-வது பாசுரம்.

கரவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
வரனவில் திறல்வலி யளிபொறை யாய்நின்ற
பரனடி மேல்குரு கூர்ச்சட கோபன்சொல்
நிரனிறை யாயிரத் திவைபத்தும் வீடே.

பதவுரை.

கரவிசும்பு - கரந்த ஆகாசம், காற்றையாவது உணரலாம், ஆகாசமிருப்பதை உணரவரிது என்று தாத்பரியம்.

எரி - நெருப்பு, வளி-வாயு, நீர்-நீர், நிலம்-பிருதிவி, இவைமிசை - இக்குறிப்பிட்ட பஞ்சபூதங்களின் மேலிருக்கிற, வர - சிரேஷ்டமான, நவில் - சப்தம், திறல் - சாமர்த்தியம், எரிக்கும் சக்தி, வலி - (காற்றின்) பலம்; அளி - சிலுசிலிர்ப்பு (நீரின்குணம்); பொறை - பொறுமை - எவ்விதம் வெட்டினாலும் மாறாத்தன்மை பூமியின் லக்ஷணம்: ஆய்நின்ற - இவ்விதச் சக்திகளாய் நின்ற, பரனடிமேல்-ஸர்வவஸ்துக்களுக்கும் மேலான எம்பெருமான் திருவடிகளின் மேல், குருகூர்ச் சடகோபன் சொல்-ஆழ்வார் அருளிச் செய்த; நிரல் நிறை - நல்ல சந்தர்ப்பங்கள் அழகான சொற்கள் இவ்விரண்டும் வாய்ந்து அவன் கீர்த்திக்கேற்ப வெகு அர்த்தத்தில் சிறந்த, ஆயிரத்துள் - ஆயிரங்களாக அமைந்த, இவைபத்தும்-இந்தப்பத்து பாட்டுக்களும்,

வீடே - மோக்ஷம்போல் பக்தர்களுக்கு நிரதிசயமான போக்கியமாகும்.

விரிவுரை:—இப்பாட்டில் லீலாவிபூதியாக, லோகங்களை வியாபிக்கிறவனென்று சொல்லியிருந்தாலும், நித்தியவிபூதி லோகத்திற்கும் உபலக்ஷணமென்று கொள்ளவேண்டும். இப்படிப் பொருள் கொள்ளாத பக்ஷத்தில் முதல் பாசுர சங்கிரகம் வாராமற்போகும். ஆயிரம் பாட்டுகளை யடைவாக ஆழ்வார் ஸங்கல்பித்துக்கொள்ளவில்லை என்றதைமுன் 1929-ம் ஸெப்டெம்பர்மீ 28-ஆம்தேதி 47வது இதழ் 927-ம் பக்கத்தில் யாம் வரைந்ததை அன்பர்கள் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டுகின்றோம். எட்டாம் பாட்டின் அவதாரிகையில் இப்பத்தின் சங்கிரகம் எடுத்து வரைந்துள்ளதால் இங்கு அதைத் திருப்பியும் எழுதவில்லை. "பரனடிமேல் சொன்ன'' என்கிறது உபசாரமாகக் கூறியபடி. பகவானுடைய விபூதிகளைப் பாக்கப்பேசிய இத்திருவாய்மொழி "அவனடிமேல்'' என்று சொல்லத்தடையில்லை.

# தமிழ்ப் பாடம் 112.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[176-வது பக்கத் தொடர்ச்சி.]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

பார்த்தனிவை புகன்றிறைவன் பணித்தருள
விருந்ததற்பின் பரிவி னோடும்
தீர்த்தனிரு பதமிறைஞ்சித் தருமனையுங்
கைதொழுது சினங்கொள் வேலா
னீத்தநெடுங் கடலெழுபா ரடலைவர்
பெறுவரெனு நிகழ்ச்சி பொய்யோ
கோத்தருமந் தனிலாண்மை கூறாதோ
கூறுகநீ கொற்ற வேந்தே 21.

கண்ணன் சென்று உரைத்தாலும் துரியோதனன் நாடு கொடுக்கமாட்டான் என்ற கருத்தில் அர்ச்சுனன் கூறுகின்ற செய்யுள் இதன்முன் ஒன்று விடப்பட்டது. இச்செய்யுளில் நகுலன் தனது எண்ணத்தைத் தெரிவிக்கத் துவக்குகின்றான்.

பதவுரை.

பார்த்தன் - அர்ச்சுனன், இவை - இவ்வார்த்தைகளை, புகன்று - சொல்லி, இறைவன் - கண்ணபிரான், பணித்து அருள - கையமர்த்தியருளவும், இருந்ததன் பின் - உட்கார்ந்தபின்பு,

சினம் கொள் - கோபம் மிகுந்த, வேலான் - வேலாயுதத்தையுடையவனாகிய நகுலன், தீர்த்தன் - கண்ணனது, இருபதம் - இரண்டு பாதங்களையும், இறைஞ்சி - வணங்கி, தருமனையும் - தருமபுத்திரனையும், கைதொழுது - கைகூப்பித் தொழுது,

நீத்தம் - நீர்மிகுந்த, நெடும் - பெரிய, கடல் - கடலால் சூழப்பட்ட, எழுபார் - ஜம்பு பிலக்ஷம் குசம் கிரௌஞ்சம் சாகம் சால்மலி புஷ்கரம் என்னும் ஏழு தீபங்களையுடைய பூமியையும், அடல் - வலிமை பொருந்திய, ஐவர் - பாண்டவர்கள், பெறுவர் - அடைவார், எனும் - என்னும், நிகழ்ச்சி - உலகத்தார் சொல்லும் சொல், பொய்யோ - பொய்யாகுமோ,

கொற்றம் - வெற்றிபொருந்திய, வேந்தே - தருமராஜனே, கோ தருமம்தனில் - ராஜ தர்மத்திலே, ஆண்மை - வீரம் பராக்கிரமம் தறுகண் முதலிய லக்ஷணங்கள், கூறாதோ - அரசருக்கு வேண்டுமென்று கூறப்பட்டிருக்கவில்லையோ, கூறுக நீ - நீயே சொல் (என்று மேலும் இயம்புவான்.)

விரிவுரை:—தருமனது கருத்திற்கு வேறுபட்ட இத் தம்பியர்மூவரும் தத்தம் வயதிற்குத் தக்கபடி



வார்த்தையின் வன்மையைக் குறைத்து உரைத்தது கவியின் திறமையை நன்கு காட்டுகின்றது. அடுத்த தம்பியாகிய வீமன் தருமனைச் சிறிதும் மானமிலான் என்றும், அவனுடன் பிறந்ததால் தாம் பாழாயினர் என்றும் மறையாது இளிவரப்பேசியதுமன்றித் தன்னைத் தூது போக்கும்படி பரிகசமும் செய்தான். இவன் பின்னவனாகிய அர்ச்சுனன் "மாண்டார்போல் அதுகண்டு மன்னவையில் யாமிருந்த மாசு தீர வேண்டாவோ'' என்று முறையிட்ட சொற்கள் தருமனைப் 'பிணமே' என் றழைத்ததாகும். எனினும் வீமனைப்போல் 'மானமிலான்' என்று படர்க்கையில் வற்புறுத்தாமல், 'மாண்டார்போல் நாமிருந்த' என உளப்பாட்டுத் தன்மையில் தன்னையும் சேர்த்துக் கொள்வதால் அவ்வசையினது வன்மை ஒரு சிறிது மறைகின்றது. இவ்விருவர்க்கும் இளையோன் நகுலன், 'கோத்தருமந்தனில் ஆண்மை கூறாதோ' என்னும் சொற்களில், 'போர்க்கோழைப் பேதை' எனத் தன் முன்னோனைக் கடிகின்றான். அதுவும் வீமனைப்போல் முன்னிலைப்படுத்தாமலும் அர்ச்சுனனைப்போல் உளப்பாட்டுத்தன்மையு மாக்காமலும் ராஜதர்மம்யாதென்று கேட்பான்போல் சிறிதே கூர்மையொடு வசையை ஏவினான். மானமிலி என்றான் வீமன், பிணம் என்றான் அர்ச்சுனன், நகுலன் பேடி என்றான். இவர்தம் வயதிற்குரிய வரன்முறை இதுவாயிற்று. பின், திரௌபதி, மாண்டார்போல் என்பதை மாத்திரம் விட்டு விட்டுப் "பாண்டவரும் பார்த்திருந்தார்'' என்பாள்.

நகுலனிவை யுரைத்ததற்பி னன்றெனக்கை
யமைத்தருளி நகுலன் சொல்லும்
இகல்விசயன் தன்மொழியுந் திறல்வீம
னியம்பியதும் யாவும் கேட்டோம்
புகலரிய வுணர்வுடையோய் புகழுடையோய்
திறலுடையோய் புகனீ யென்ன
முகிலனைய திருமேனி முகுந்தனுக்கு
மனமுருக மொழிகின் றானே. 22.

கண்ணன் உரைத்தாலும் துரியோதனன் இணங்கானென்றும், உருப்பசியைக் கவர்ந்து சென்ற கேசியென்னும் அசுரனை வென்று அவ்வணங்கை இந்திரனுக்கு மீட்டித்தந்த புரூருவனது மரபில்வந்த தாம் தம் மனைவிக்கு உற்ற பழியைத் தீர்க்காதிருப்பது பேதைமையென்றும், தானொருவனே நின்று பகைவரை வெல்லும் ஆற்றல் உடையோன் என்றும் முறையே இந்நகுலன் இயம்பிய மூன்று செய்யுள்கள் இதன்முன் இங்கு விடலாயின. இச்செய்யுளில் கண்ணன் சகாதேவனது எண்ணத்தை உரைக்கும்படி வேண்டிக்கொள்ளுதல் கூறப்பட்டுள்ளது.

பதவுரை.

நகுலன் - நகுலன், இவை - இவ்வார்த்தைகளை, உரைத்ததன்பின் - உரைத்த பிறகு, (கிருஷ்ணன்) நன்று என - நல்லது என்று, கையமைத்து அருளி - கையமர்த்தி அருளிவிட்டு, (பிறகு சகாதேவனைப் பார்த்து)

புகல் அரிய-சொல்வதற்கு அருமையான, உணர்வு உடையோய் - மெய்யுணர்வு உடையவனே, புகழ் உடையோய்- கீர்த்தியை உடையவனே, திறல் உடையோய் - பராக்ரமம் உடையவனே,

நகுலன் சொல்லும் - நகுலன் சொன்னவைகளும், இகல் - பகை மிகுந்த, விசயன்தன் - அர்ச்சுனனது, மொழியும் - சொற்களையும், திறல் - ஆற்றல் மிகுந்த, வீமன் - வீமசேனன், இயம்பியதும் - சொன்னவைகளையும் (தருமன் சொன்னவைகளையும்) யாவும் - எல்லாவற்றையும், கேட்டோம் - கேட்டோம். (இனி நீ உன்னுடைய எண்ணத்தை) புகல் - சொல், என - என்று (கண்ணன்) வேண்ட,

முகில் அனைய - மேகம் போன்ற, திருமேனி - அழகிய மேனியையுடைய. முகுந்தனுக்கு - கிருஷ்ணனுக்கு, மனம் உருக - மனம் உருகும்படி, மொழிகின்றான் - சகாதேவன் பின்வருமாறு சொல்கின்றான்.

விரிவுரை :—ஒருவர் உரை முடிந்ததும் மற்றவர் தானேயெழுந்து பேசத்தலைப்பட்டது போலல்லாமல் சகாதேவன் தன்னை வேண்டும்வரையில் வாய்திறந்திலன். 'உணர்வுடையோய், புகழுடையோய், திறலுடையோய்' என்று கண்ணனாலேயே துதிக்கத்தக்கவனாகிய இவன், மற்றவர் உரைத்தனபோல் உலக இயல்பிற்கே உரியனவாகாமல் தத்துவஉணர்வினால் செப்புகின்றானதலின் அது கேட்கக் கிருஷ்ணனுக்கு மனம் உருகியது, என்கிறார் கவி. மற்றவர் உரைத்தவை கேட்கக் கண்ணனுக்குக் காது புளித்ததோ, யாதோ!

சிந்தித்த படிநீயும் சென்றாலென்
ஒழிந்தாலென் செறிந்த நூறு
மைந்தர்க்குண் முதல்வனிலம் வழங்காம
லிருந்தாலென் வழங்கி னாலென்
கொந்துற்ற குழலிவள் முடித்தாலென்
விரித்தாலென் குறித்த செய்கை
யந்தத்தின் முடியும்வகை யடியேற்குத்
தெரியுமோ வாதி மூர்த்தீ. 23

எது எவ்வாறாயினும் கண்ணனுடைய கருத்தே கைகூடுமாகையால் தம்முடைய முயற்சியால் சில செய்ய வேண்டுமென நினைத்தல் பேதைமை பெரிதுடைத்தென்பான் சகாதேவன்.

பதவுரை.

சிந்தித்தபடி - எண்ணியபடி, நீயும் - நீயும், சென்றால் என் - தூதுபோனாலென்ன, ஒழிந்தால் என் - போகாது விட்டால் என்ன;

செறிந்த - அடர்ந்த, நூறு - நூறு, மைந்தர்க்குள்- புத்திரர்களுக்குள், முதல்வன் - மூத்தவனாகிய துரியோதனன், நிலம் - நமது ராஜ்யத்தை, வழங்காமல் இருந்தால் என் - கொடுக்க மறுத்துவிட்டால் என்ன, வழங்கினால் என் - கொடுத்தால்தான் என்ன ;

இவள் - இந்தத் திரௌபதி, கொந்து உற்ற - தன் சிக்குப்பிடித்த, குழல் - கூந்தலை, முடித்தால் என் - முடித்தால் என்ன, விரித்தால் என் - விரித்தே கிடந்தாலும் என்ன;

ஆதிமூர்த்தி - பரமாத்மாவான கிருஷ்ணனே, குறித்த - நீ மனதிற் கொண்டுள்ள, செய்கை - காரியமானது, அந்தத்தில் - கடைசியில், முடியும்வகை - எவ்வாறு முடியும் என்பது, (உனக்கே யல்லாமல்) அடியேற்கு - அடியவனாகிய எனக்கு, தெரியுமோ - தெரியக்கூடுமோ !

விரிவுரை :— அப் பரம்பொருளே இக் கண்ணபிரான் என்றும், அவனன்றி யோரணுவும் அசையாது என்பதும் யாவருக்கும் தெரியுமாயினும் அகங்கார

மமகாரங்களென்னும் மாயை சூழ்ந்துநின்று அவர்கள் தம் அறிவைப் பயன்படுத்திக்கொண்டு அதன்படி வாழ்க்கையை நடத்தவொட்டாமல் செய்கின்றது. அந்த மாயையையும் வெல்லுமொரு வல்லமை மிகுந்த தத்துவஞானியாகிய சகாதேவன் ஒருவனே பாண்டவர்திறத்தில் அவனது அறிவிற்கு ஏற்றபடி மொழிகின்றான். ஈச்வரனே இருந்து ஒரு கருமத்தை நடத்திவைக்கும்பொழுது அவனது திருவுள்ளம் எவ்வாறு நாடுகின்றதென்பதை உணரலாற்று மக்கள் இது செய்து இன்னது ஆகவேண்டும் என்று துணிப்பதெல்லாம் வீண், என்னும் உண்மை இங்கு உணர்த்தலாகின்றது.

---

முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே
அன்றலகை முலைப்பா லுண்டு
மருதிடைச்சென் றுயர்சகடம் விழவுதைத்துப்
பொதுவர்மனை வளர்ந்த மாலே
யொருவருக்குந் தெரியாதிங் குன்மாயை
யானறிவே னுண்மை யாகத்
திருவுளத்துக் கருத்தெதுவோ வதுவெனக்குங்
கருத்தென்றான் றெய்வ மன்னான். 24

இங்குள்ளவர் எவர்க்கும் அறிய இயலாத உனது மாய்ச்செயலை நான் அறிவேன், எனவே, உனது திருவுள்ளக்கருத்து எதுவோ, அதுவே என் கருத்தும், என்று சகாதேவன் இச் செய்யுளில் கூறுகின்றான்.

பதவுரை.

முருகு - தேனை, அவிழ்க்கும் - சொரியும், பசுந்துளபம், - பசுமை பொருந்திய துளசியை, முடியோனே - முடியில் தரித்துள்ளவனே!

அன்று - நீ குழந்தைப் பருவத்திலிருந்த அந்நாள், அலகை - பூதகி யென்னும் அரக்கியினுடைய, முலைப்பால் - முலைப்பாலை, உண்டு - குடித்து,

மருது இடை-மருதமரங்களுக்கு நடுவிலே, சென்று தவழ்ந்து, உயர் - உயரமான, சகடம் - சகடாசுரன் என்னும் அசுரன், விழ-விழும்படி, உதைத்து-உதைத்துத்தள்ளி; பொதுவர் - இடையர்களுடைய, மனை - வீட்டில், வளர்ந்த-வளர்ந்துவந்த, மாலே-திருமாலே;

இங்கு - இங்குள்ள, ஒருவருக்கும் - யாருக்குமே, உன்மாயை - உன்னுடைய மாயை, தெரியாது - தெரியாது.

யான் அறிவேன் - நான் ஒருவனே அறிவேன், (ஆதலால்) உண்மையாக - வாஸ்தவத்தில், உன் கருத்து எதுவோ - உன்னுடைய கருத்து எதுவோ, அதுவே - அதுவேதான், என் கருத்தும் - என்னுடைய கருத்தும், என்றான் தெய்வம் அன்னான் - என்று தெய்வத்தன்மை யுடையவனாகிய சகாதேவன் கூறினான்.

விரிவுரை:—தான் குறித்த செய்கையை நிறைவேற்றுவதே நோக்கமுடைய கண்ணன், "ஐவராம் அவனிபர்க்கு நினைவு ஏது" என்று வஞ்சனையாகக் கேட்டதற்குச் சகாதேவனும், திருவுளத்துக் கருத்தெதுவோ, அதுவே தனுக்குங் கருத்தென்றுக் குறிப்புணர்த்துகின்றனன். முடிகின்ற வரையில் நினைத்த கருமம் யாதென்று பிறர் அறிந்துகொள்ள இயலா வகைக் கருமங்களைக் கண்ணன் செய்கின்ற மாயத்தினை, அவன் இளமையிலேயே, பூதகியின் பாலுண்டதையும், மருதிற்கிடையில் தவழ்ந்ததையுங் காட்டிக் குறிக்கின்றான். இது கருத்துடை அடையணி ஆகும்.

"மாதுலனாகியும் ஏதிலனான வஞ்சன் கம்சன் வரவிடுத்த பூதனைதன்னுயிர் போதாவுண்ட புயல் வண்ணா" என்று வில்லிபுத்தூரார் பின்னேரிடத்தில் கண்ணனை அழகாகத் துதிக்கின்றார். நஞ்சுபூசிய முலைப்பால் கொடுத்துக் கண்ணனைக் கொல்லும்படி கம்சன் ஏவ வந்த பூதனையின் முலைகளை இக்கள்ளக் குழந்தை ஒன்று மறியாததுபோல் இறுகப் பற்றி உறிஞ்ச, அவள் கதறிவீழ்ந்து உயிர்துறந்த கதையை யாவரும் அறிவர்.

கண்ணனது 'விஷமங்களுக்கு'ச் சகியாத யசோதை அவனை உரலோடு கட்டி[illegible] கண்ணன் அவ்வுரலையும் உருட்டிக்கொண்டு, அடுத்தடுத்து வளர்ந்திருந்த இரண்டு மருதமரங்களுக்கு இடையே தவழ்ந்திடவும், அதனால் அவ்வுரல் தடைப்புண்டு மரங்கள் இரண்டும் முறிந்தன. குபேரனது புத்திரர்களாகிய நளகூபரன் மணிக்கிரீவன்என்னும்இருவர் ஆடையின்றித் தெய்வமகளிருடனே புனலாடிக்கொண்டிருந்த வேளையில் நாரதர் அங்கு வந்திடவும், மாதர்கள் நாணமுற்று ஆடையுடுத்து விலகினர். மதுமயக்கத்தால் இவ்விரு மைந்தர் மாத்திரம் மரம்போல் நிற்க, நாரதர், "நீங்கள் மரமே யாக" எனச் சபித்து, அவர் வேண்டுகைக் கிணங்கி, "நெடுங்காலஞ் சென்றபின் திருமால் கிருஷ்ணனாக வந்து இச்சாபத்தைத் தீர்த்தருள்வார்" எனப் பணித்துப் போயினர். மருதாய் நின்றிருந்த அக் குபேரன்புதல்வர்களுக்கு அருள்புரியவே உரலோடு அவற்றிடைக் கண்ணன் நுழைந்தனன் என்பது கதை.

நந்தகோபனது மனையில் ஒரு வண்டியின்கீழ், தொட்டிலில் கண்வளர்ந்திருந்த கிருஷ்ணனைக் கொல்வதற்குக் கம்சன் ஏவிய அசுரன் ஒருவன் அவ்வண்டியின் சக்கரத்தில் ஆவேசித்தது அறிந்த இப்பிள்ளை, அழுவதுபோல் பாதத்தைத்தூக்க வண்டி கவிழ்ந்து அசுரனும் மாண்டான், என்பது சகடுதைத்தவரலாறு.

"இவ்வண்ணம் மாயம்பல பிள்ளைப்பருவத்திலேயே செய்தோனே, இப்பொழுதும் நீ செய்வது மாயையே என்று யானொருவனே அறிவேன். மாயை என்பது அறிவேனாயினும் அன்னதன் முடிவு யாதென்பது எனக்குந் தெரியாது. ஆகையால் உன்கருத்தே எனது கருத்தும்" என்றால்தான் உனக்கு யான் உண்மையை உரைத்ததாகும்,' எனக் கண்ணனுக்கு மெய்யுணர்வுடைய சகாதேவன் இங்குச் சாற்றினான்.

---


**கம்பராமாயணம்.** வை. மு. சடகோப ராமானுஜாசாரியார், கே. கிருஷ்ணமாசாரியார், வை. மு. கோபாலா கிருஷ்ணமாசாரியார்–பதிப்பு,

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கியிருக்கின்றன. பாலகாண்டம் ரூ 5. அயோத்தியா காண்டம் ரூ. 5. ஆரண்யகாண்டம் ரூ. 4. கிஷ்கிந்தா காண்டம் ரூ. 4-8-0 சுந்தரகாண்டம் ரூ. 5. (வி பி. செலவுவேறு) கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை.




# இலஞ்சிப் பாவை.

[172-வது பக்கத் தொடர்ச்சி]

## 8. காத்தன் பிறப்பும் செயலும்.

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சேர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடும்மே.

காரைக்காலம்மையார்.

காலங் கடக்கின்றது; நாழியுங் கிழமையும் நமக்கென நில்லா. நம்மைக் குழவிப் பருவத்தே தம் முழங்கால்மீதாட்டித் தேம்படு கிளவிகள் மேம்பட உரைத்துத் தாங் களித்தும் அணங்குறுத்தும் பேய்க்கதைகள் பல சொல்லி நம்மை மகிழ்வித்தும் பாராட்டினோர் பலர் முதிர்ந்து மறைந்துவிட்டனர். எஞ்சிய சிலரோ இளைத்த யாக்கையராய்ப் பித்தெழமூத் திருமியெய்த்து, கோலுடைக்கையினர் குனிந்த முதுகினர், கீழ்த்திசை நோக்கி நடந்து மணற்கரை யுற்று, புளினமேறிய படகுக ளென்ன, பின்னிடைந்த தரங்கம் முன்னேறி யலைத்து, அந்தகாரமாய ஆர்கலி அழுவத் தாழ்த்தும்வரை காத்துநிற்கின்றனர். எனினும், குறிஞ்சித்தலைவனொருவன் சங்கமெடுத்தூத, குன்றிலும் குகையிலும் கணவாயிலும் உள்ள வீரர்பலர் விரைந்துசூழ்ந்து கொடியைக் காத்துநின்றதையும், விண்வீழ் கொள்ளி போன்ற 'கரிக்கோல்' சென்ற இடந்தோறும் விருதர் பெயர்ந்து வெளிப்போந்ததையும் மறவாதாரும் சிலர் உளர்.

இளவேனிற் பருவத் திரவி தன் செங்கதிர் விண்ணிற்படர்ந்து ஏரியின் நீரில் எதிர்நிறங் காட்டியது. மெல்லென மெல்லெனத் தன் முகுரக் கதுப்பினைத் தைவருமக் கோடைச்செல்வன் பட்டதோ இல்லையோவென முத்தமிடலும் மகிழ்ச்சிமிகு இலஞ்சிதான், நாணமுறு நங்கையென அகங்களித்ததன்றிப் புறத்தொரு சிறு புற்புதங் காட்டாதது மற்புதமே. ஏரியினெழின்மார்பிடைப் படிந்த மலையினெதிர்வடிவங்கள் கலைந்தில வெனினும்சிதைவின்றி நிலைக்கவுமில்லை. அவை, மனிதர் தம்மனத்தாற் சமைத்த ஆசினி அரணுள் வைகிக் களிகொளத் துய்க்குமம் மாயமகிழ்ச்சியென்ன, ஆனுத் துளக்க முற்றன. அல்லிதன் முகைகள் வெள்ளிக் கிண்ணங்களென அவிழ்தர, விழித்தெழு பிணைமான், குனித்துத்துள்ளுந் தன்மழவிளங் கன்றினைப் பனிநீர் திரள்நுனிப் பசும்புற்றரைக் கழைத்துச்செல்லும். மஞ்சுலாம் மலையிடைப் பிறந்த அருவிகள், இமம் நீங்கி இயற்கை யொளியோ டிலங்கும். விண்ணிடை மறைந்த வானம்பாடி எண்ணரும் இன்னிசை எங்கும் பரப்ப, கான மென்குயில்களின் கனிந்த கீதம் கதிரவனுக்குப் பல்லாண்டு கூற, உவப்புறு புறவும் அமைதியும் அன்புங்காட்டி அவைகளுக்கு எதிர்குரல் தந்தது.

இயற்கை யுயிர்களெங்கு மின்னவாறு களிசிறந்து திருவிழாக் கொண்டாட, இராதாகிருஷ்ணன் மனதில் மட்டும் இருள் நீங்கவில்லை. உறையிட்ட வாளொன்றைக் கையிலேந்தி, சுடரோன் முகத்தெதிர் சற்றே நோக்கி, வாளை யலைத்து, மணலின்மேல் மடக்குண்டு உலவியதும் அவனது மனக்குழப்பத்தின் செயலே. மறைந்த உட்கருத்துடைக் கருமங்களை, ஒரு பாறையின்கீழ், செவ்வனே செய்துவைக்கும் பொறுப்புடன் புரிந்தனர் அவனுடைய பரிவாரத்தினர். 'கரிக்கோல்' வெளிச்செல்வதன்முன் தொன்றுதொட்டு அந்த நாட்டில் செய்துவந்த சடங்குகள் முழுவதையும் வழுவின்றிச் செய்யவேண்டியது இராதாகிருஷ்ணனைப் புடை சூழ்ந்தார் கடமை. கருமங்கள் முற்றுறுமுன் காலங் கடத்தலைப் பொறாயைத் தலைவன் தம்மேல் பன்முறை யேவிய கூர்த்தநோக்குக் கண்டஞ்சின ஏவலாளர், தலைக்கோடு விட்டெழுந்து வானோங்கி விசும்பிடைத் தோகை விரித்துநின்று, ஏரியின்மீது தன் னிழல் பரப்பும் எருவையைக் கண்டடங்கும் புட்களைபோல் அடங்கினர்.

இடியுற வுடைந்த தேக்கஞ்சினைகளுடன் உலவை பல விரவிய ஒரு குவியலின்முன், நனைந்த ஆடையனாய்க் காத்தன் நின்றிருந்தான். கருநிறம் மாறிவரும் மோவா யுரோமமும், செந்நிறமுற்ற சடைக்காடும் அகக்களிப்பற்ற அவன் முகத்தை முற்றும் மூடின. அவன் கால் கரங்களிற் றோன்றின, அருந்தவத்தின் மெய்யூறு. தானுறை தாபதத்தின் நீழல் நீத்துத் தனிமையொழித்துத் தன்குடி யீடேற இவன் நாட்டில் தோன்றியதும் உற்பாதங் கண்டதா லென்ப. அருந் தவசிகளுக்குரிய இரும்பொறை அவனிடத்தில்லை. நரபலியும் நடுக்குறுமற் காணும் வன்மையுடைய தவனுளம்; அவனறை மந்திரங்கள் அதர்வண வேதத்தன. ஆசிகூற லென்பது அவனிடமுண்டோ என்று ஐயுற லமையும். ஆதலின் எவரும் அவன்பால் அணுகி உதவி ஒன்றும் வேண்டிலர். வழிப்போக்கர் அவன்மடத்தை நண்ணாது வட்டமிட்டுச் செல்வர். வேட்டைவீரரும் தமது நாய்களைக் கூவியழைத்து அச்சூழல் நீங்கிச் செல்வதும் அச்சமேதான். மலையினுறைபவர் அவன் கண்முன் நேர்படின், தலைவணங்கித் தாழ்வரேனும், அவ்வணக்கம் அவனிடம் இயற்றும் வழிபாட்டினா லன்று.

காத்தனது பிறப்பைப் பற்றிப் பல கதைகளுண்டு. அவன் தாய் மானிட இயக்கமற்றவோர் பூழையினிடையே, பன்னெடு நாட்களுக்குமுன் போரிலிறந்த படைவீரர் என்புகள், மழையால் நனைந்தும் காற்றுலர்ந்தும் வெளுத்துதிர்ந்து குவிந்திருக்குமொரு இடந்தனில் நள்ளிரவில் ஆடுமாடுகளை அடைத்துக் காத்து வருவ தியல்பு. அவ்விடந்தான் காணக் கண் கூசும். மனிதனது செயல்களைப் பரிகசஞ் செய்வதொக்கு மக் காட்சி. இரும்பையு மிருபிள வாக்க வல்ல இகலுடைக் கைகளங்கே புல்லிய புதல்களாற்

கட்டுண்டு கிடக்கும். அச்சமென்பதையே யறியாத மனத்தைத் தன்னகத்தே கொண்டிருந்த மார்புக்கூட்டில் வெருவாக் குருவிகளின் சிறுகூண்டு காணப்படும். காலகதியைக் கருதாது மெல்லென ஊர்ந்துசெல்லும் விழியொழி புழுக்கள் மனிதனது பரபரப்பினைக் கண்டு அங்ஙனே நகும். மாண்ட போர்த்தலைவனது மண்டையோட்டைப் பூங்கொடிகள் சூழ்ந்து சுற்றி, வாகையும் பாகையும் வகையுடனளிக்கக் காணலாம்.

இன்னபடி வெருக்கொளக் கிடக்குமக் கொடுங் கானத்திடை விண்வீழ் பனியொழிய வேறு பனி யோராது கம்பளம் போர்த்துக் கால்நடை மேய்த்து வந்தனள் காத்தனுக்குத் தாயாம் அவள். என்னுற்றதோ அவட்கொருநாள்? நிரைகாவல னெவனும் அவளரு குற்றிலனென உறுதியுட னுரைத்தா ளவள்; போர்வீர னெவனும் அவள்பக்கல் சார்ந்திலன் எனச் சத்தியஞ் செய்தனள். எனினும் அவ்விரவு முதல் மையிட்டெழுதாளாய், மலரிட்டு முடியாளாய், தவளவாணகை தவிர்ந்தாளாய், ஆடலும் பாடலும் அடியுடனொழித்து, கோயிலுங் குளமுங் குறுகுதல் தவிர்த்து, தனியேகிடந்து மனநோய் உழன்று, காத்தனைக் கருவுயிர்த்த அஞ்ஞான்றே ஆவி நீத்தனள்.

பிறந்தநாள்முதல் பெற்றோ ரன்பறியாப் பேதைப் பிள்ளை,கண்டோரிடங் கனிந்தமொழி பெறாக் குழவி, தற்சூழ்ந்த சிறுரிடம் இரக்கமும் இணக்கமு மென்றுங் காணு இளவல், இளமை முழுதும் பிறரிடங் கேட்டது வசையே! மகிழ்ச்சி துறந்த இம்மகவு, மனமுடைந்து தனியே திரிந்து, கண்டவ ரிகழுங் கடுஞ் சொற்கொண்டும் பிறப்பைச்சுட்டிப் பிறர் தூற்றும் பழிமொழி கேட்டும், இரவு முழுமையும் இடுகாட்டின் நிலவி லுலவி, கான்யாறுகண்டு கரைந்தும், மாக்களொடு முறையிட்டும், இறுதியில் இகழுநர் குறித்த தன் தாதைதன்னை

> வேய்களோங்கி வெண்முத்துதிர
>     வெடிகொள் சுடலையுள்
> ஓயுமுருவி லுலறு
>     கூந்த லலறு பகுவாய
> பேய்கள் கூடிப் பிணங்கள்மாந்தி
>     யணங்கும் பெருங்காட்டில்

தேடலுற்றான்.

இந்நிலைகண்டு இவனை நல்வழி யுய்க்கமுயன்ற முனிவர் பலர்; கல்வி கற்பிக்க முயன்ற கல்விக்கழகத்தார் சிலர். எனினும், அவ னுள்ளத் தணலைக் குளிர்விக்கும் கலைகள் அச்சமயம் இந்திரஜால வித்தைகளே. கொடுமையுடைய பல மந்திரங்களை உருவிட்டு ஓதியும், இயற்கைக்கு மாறுய செயல்களைக் கருத்துட னியற்றியும், அறிவுமயங்கிய காத்தன் முடிவில் மலைகளினிடையே மனிதர் கண்ணிற்படாது உறையலானன்.

மணல்வெளிகளே அவன் மனதிற்கியைந்த உருவெளித்தோற்றங்களை உண்டுபண்ணின. கருநிறக் கிரி முனைக ணின்றுவீ ழருவிகளின் பெருக்கை யுற்று நோக்கியும் நீத்தத்தி லுறுசுழியைக் கண்ணிமையாது கண்டும் கலங்கிய சித்தமுடையானுக்கு துரைகளினின்று நதித்தெய்வங்கள் தோன்றின; வரைத்தடங்களில் மூடிய பனியே பேயின துருவங்கொண்டது. மேருவை யனுக்கவரு மாகால் மாண்டொழிந்தோர் புலம்புலுறும் முறையீடாய் மாறிற்று. இவ்வகையாய பற்பல மாயத்தோற்றங்களி லவன் மாழ்கிக் கிடந்தான்.

அவனுக்கு மனித உலகத்தின் தொடர்பு, அவன் தாயை யளித்துக்காத்த இராதாகிருஷ்ணன் குடும்பத்தாரிடையேதான். சிறிதுநாட்களுக்குமுன் அக்குடும்பத்தின் தேவதை இரங்கியழுங்குர லவனுக்குக் கனவிடை ஓர் இரவு கேட்கவே, இன்னதற்கு நிமித்தம் யாதென அயிர்க்கும் வேலை, தானிருந்தபழுவத்திடை நள்ளிரவில் மனிதர் செல்லக்கூடா இடந்தனில், குதிரைகள் எதிர்த்துப் பொரும் பேரொலி செவிப்பட, தலைவன் தன் கொடியிற் குறியாய்க்கொண்ட பனைமர மொன்றின்மே லிடிவீழ்ந் ததனை யிருபிளவாக்கியது. இவ்வுற்பாதங்களினுல் தலைவனுக்குக் கேடு கிட்டிற்றேயென ஐயமுற, விரைந்தோடித் தன் நாடு வந்தடைந்தான் இயலுமெனின் அவனைக் காக்க வேண்டு மென்ற நற்கருத்துடைய காத்தன்.

இன்னதோர்தன்மைவாய்ந்த காத்தன் அன்றுகாட்டிய சடங்குகள்யாவும் முடிந்தன. மந்தையிற் சிறந்த வெள்ளா டொன்றினை எரியுந் தணல்முன் கொணரவும் இராதாகிருஷ்ணன் உடைவா ளதனை ஊறுபடுத்தியது. தன்குருதி சொரிவதைத்தானே வெள்ளையும் நீர்பொழி கண்கொண்டு பொ[illegible]ண்டு, தன்னினைவு மயங்கும்வரை இரக்கத்தோடு உற்றுநோக்கியிருந்தது. தலைவனது மூதாதையர் கல்லறைகளின்மேல் வளர்ந்த மரங்களின் கிளைகளினின்றும், ஒருமுழ நீளமுள்ள கொம்புகளிரண்டுகொண்டு, அவற்றை யொன்றன்மே லொன்றாய்க் குறுக்கே யடுக்கிப் பிணைத்துத் தன் மெலிந்த கைகளா லுயரத்தூக்கி, வெறித்த நோக்குடன் காத்தனும் பின்வருமாறு நுவலலுற்றான்.

“இச் சின்னத்தைக் கண்டும், அதன் கிளைகள் விண்ணின்று அழுது சொரிந்த கண்ணீரே பனிநீரா யொழுகப்பெற்ற நமது மூதாதையர் கல்லறைகளினின்றும் வளர்ந்தனவென் றெண்ணுத தாயத்தான் அழியக்கடவன். தலைவனது நம்பிக்கைக்கு உரியனுகாத அவனது ஈமச்சாம்பர் புண்ணிய நீரால் நனைக்கப்பெறுமல் காலால் துவைக்கப்படும் புழுதியோடு சேரட்டும். எல்லாத் தாயத்தாரும் அவனை வெளியே தள்ளி எண்ணற்கரிய தீங்குகளுக்கு இலக்காகும்படி சபித்துத் துரத்தக் கடவர்.”

அவ்வளவு சொல்லி நிற்கவும், சூழ்ந்துநின்ற சுற்றத்தாய பரிவாரத்தின ரெல்லாம், தங்கள் வாள்களை வானேச்சி, கண்ணிற் பொறியெழ, வலதுகாலை முன் வைத்து, இடதுகையிலிருந்த கேடயங்களை யுதறி, அச்சொற்களை முதலில் மெதுவாயுரைத்தும், பிறகு நடுக்கடலில் பிறக்குஞ் சிறு அலைகள் திரண்டுதிரண்டு கரையினை யடையும்போது பெருங் கல்லோலமாய் ஆர்ப்பரித்தெழுந்து முழங்குவதுபோல், நெடுங்குரல் ஓங்கப் பாய்ச்சி “அந்தத் துரோகி அழியக்கடவன்! அந்தத்துரோகி அழியக்கடவன்!” என்றிரைந்தனர். இவ்வமலையைக் கேட்ட நரிகளும் குதூகலித்துக் குறுகின, களிகொளும் கழுகுகளும் கத்தின. தம்மை விருந்திற்கழைக்கும் இராதாகிருஷ்ணனது போராவத்தைப் பன்முறை முன்னமே கேட்டுப் பழகியவைகளே அவை.

ஆரவாரம் அடங்கியபின் தாழ்ந்த குரலில் மந்திரங்கள் பல முணுமுணுத்து அச்சின்னத்தை அழலில் கரித்தான் காத்தன். பிறகு நான்கு முனைகளிலும் எரியெழமூட்டி மீண்டுமதை யுயர்த்தி “இச்சின்னத்தைக் கண்டவுடன் தன் னுடைவாளை உருவாதவன் சின்னபின்னமாகட்டும். இதை யெப்படியித் தீயெரித்துக் கரியாக்குகின்றதோ, அவ்வண்ணமே போரஞ்சிப் புகுந்திடுவோன் வீடும் தாயத்தார் சினமாற மூட்டிய தீயா லெரிபட்டுக் கரியாக. ஆணும் பெண்ணும் அவனை இகழ்ந்து சிறுமைபாராட்டி அவலிப்பாராக” எனக் கழறினன்.

இதுவே பெண்களின் கூக்குரலுக்குக் குறியாயது. மலைகளின்மேற் பருந்து கூவுவதை யொப்பப் பெண்களும் சிறு குழந்தைகளும் பல்லவிபோல் இச்சாபத்தைப் பன்னிப்பன்னிப் பாட ஆரம்பித்தனர்.

“அவனில்லம் செந்தீயுறக்கடவது; நாடோடியாய்த் திரிந் தவன்சேரும் அமவலம்பம் அங்கியுறக்கடவது. போகுமிடமெல்லாம் அவனைத் துன்பமும் பசியும் துணைகொள்ளட்டும். இன்மையே உடன் தொடர்ந்து அவனை உடற்றட்டும்”

பின்னுமோர்முறை பிளிறுவதன்முன் காத்தன் சற்றே யிளைப்பாறி நெட்டுயிர்த்து நின்றான். பற்களை நெறநெறெனமென்று, கண்ணிற் றீயெழ இன்னும் பன்மடங்கச்சமுறுத்தும் வன்மொழிகளை யெண்ணிக் கண் சிவப்பேற, அனலிற் கொளுந்தும் முனைகளை புலானீரிற்றோய்த்து மீண்டு முயர்த்தி “இது கைக்குக் கை மாறித் தாயத்தாரைத் தலைவனுதவிக்கு அழைக்குங்கால இதன் முறையீட்டைக் கேளாத காதுகள் கிழியக்கடவன; இதைக் கண்டவுடன்வாராத கால்கள் சூம்பக்கடவன; புறக்கணிக்கும் கண்களைக் காக்கைகள் கொத்துக; இதை நோக்கி அதிர்ப்புறும் ஆகத்தை ஓநாய்கள் பிடுங்குக; இக்குருதி யெங்ஙனம் நிலத்தில் வீழ்கிறதோ அதேபோலவ னுயிர்ச்சோரிய வன்மனை யடுப்பை அவிக்கட்டும். இவ்வுதிரத்தில் வன்னி யிங்கு எவ்வாறணைகிறதோ அதுவேபோலவனுயிரும் அவன் சோரியி லவியட்டும். அவனுக்கு நற்கதி நீங்குகவே!” என்று முடித்தான். இதைக்கேட்டவ ரெவரும் வாய் திறக்கவில்லை. கரிக்கோலைப் பிடுங்கி இராதாகிருஷ்ணனும் மதனகோபாலனிடம் கொடுத்து “இதை எடுத்துக்கொண்டு ஓடு! கூடுமிடம் இலுப்பைத் தோப்பு; ஓடு” என்னலும் வீரனும் விரைவதானன்.

---

தேம்படு கிளவிகள் - இனிமையான வார்த்தைகள். அணங்குறுத்தும் - அச்சத்தை உண்டாக்கும். புளினம் - மணல்திட்டு. தரங்கம் - அலை. ஆர்கலி அழுவம் - கடலாகிய பள்ளம். குறிஞ்சி - மலைநாடு. விருதர் -போர்வீரர். முகுரக் கதுப்பு-கண்ணுடிபோன்ற கன்னம். கோடை-மேல்காற்று. புற்புதம் - நீர்க்குமிழி. ஆசினி அரண் - ஆகாயக்கோட்டை. ஆறு - அமையாத, நிலையாத. இமம்-பனி. எருவை - கழுகு. உலவை - மரத்தின் உலர்ந்த கொம்பு. மெய் ஊறு- உடலின் மெலிவு. தாபம் - விருக்ஷம். பூழை-மலைக்குகை. புதல்-புல். பனி- அச்சம். அறுக்க - அசைத்து வருத்த. மாகால் - பெருங்காற்று. வெள்ளை - ஆடு. தாயத்தார் - இனத்தவர். ஈமச்சாம்பர் - இடுகாட்டிலெரிந்து நீர்த்த யாக்கையின் சாம்பல். கல்லோலம் - பெரிய அலை. அமலை - பேரொலி. அவலித்தல் - வருந்துதல், புலம்புதல். அவலம்பம் - புகலிடம். அங்கி - நெருப்பு. உடற்றல் - வருத்தல். சோரி - இரத்தம். வன்னி - நெருப்பு.

---

# கம்பராமாயணம்

189094

## அயோத்தியா காண்டம்.

### 1. மந்திரப் படலம்.

படையும் பொருளு மடைவிலா வரசு.

ஆன்றோர் உரைத்தபடி அரசினது முறைமையினமைதியை நாடிவருங்கால் ஏனையோர் செப்பிய சார்பறத்திற் சாயாது நம் கம்பர்பிரான் முதலறத்தில் நிலைத்ததொரு நோக்கமொடு அமைச்சரை நிமிர்த்திய நோன்மைக் கிணங்கியவாறே, தன் நூல்முழுவதையும் நனி நிகழ்த்துகின்றார்.

167வது பக்கத் தொடர்ச்சி.

சிலமிலரசதந்திரத்திலாழாது, தறுவன்றித் துணையில்லானும் தருமத்தின் கவசத்தானுமாகிய தயரதன் மறுவையேவென்ற நீதியான் ஆவதும் அமையும். எண்ணுதற்குமரிய யிதுமேன்மை இம்மன்னனுக்குக்கவிக்கரசு கம்பர்தம் திருவாயிலேயேமலர்ந்ததாதலின், இப்பேறு பெறுதற்குமுன் வான்மீகத்திலுள் ஊடாடியபோது, இளவரசாதற்கிருந்த இராமனை நோக்கி, ‘உனது கருவூலத்தையும் ஆயுதசாலையையும் வற்றுமல் வைத்துக்கொள்ளவேண்டும்’ என்று இரண்டாந்தரபுத்திகளை அவன் புகட்டலாயினன். பொருள் எற்றுக்கு, ஆயுதசாலை யெற்றுக்கு, வற்றும லிருக்கவேண்டும்? போர் வன்மை புரிதற்கே யன்றோ இவ்விரண்டும் இன்றியமையாதன. தன்னைப் பகைப்பார்பலர் இருக்கவேண்டும் என்ற அச்சம் ஒருபுறமும், அப்படிப் பகையொருங்கு மேல்வருமேல் துணையின்றித் தற்காத்தலியலாதென்னுந் தளர்ச்சியும் நிலைநின்ற வாழ்விற்கே இவை அறிகுறிகள். இனி, பகைப்பதற் குரியதாய் ஆயுதசாலையை மட்டுமே பிரித்துக்கொளினும் யாதும் பெருமையில்லை. தானென்ற நிலையில் தன்னையே தான் அநுபவிக்கத் தெரியாத சிறு மாநுடர்களுக்கே கைப்பொருளைக்கொண்டு இன்பஞ் சில நுகர்தலென்னுங் கருத்துத் தோன்றும். தன்னையே பிறர்க்களிக்கக் கற்றார்க்குங் கைப்பொருளெல்லாம் மிகை. ஆதலின், தயரதனுக்குப் பதிலாய், கம்பரது நூலில் முடி புனையுமுன் வையகப்போனகற்கு நல்லறிவு புகட்டப்புக்க வசிட்டன்,

> யாரொ டும்பகை கொள்ளில னென்றபின்
> போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
> தாரொ டுங்கல்செல் லாதது தந்தபின்
> வேரொ டுங்கெடல் வேண்டலுண் டாகுமோ

[ஒருவரோடும் நீ பகைகொள்வதில்லை என்ற மேன்மைக்கு உரியவனுவாயாயின், அதனுல் யுத்தம் இல்லாமற் போகுமேயன்றி உன்னுடைய புகழ் ஒரு நாளுங் குறைந்து போகாது. உன்னுடைய மாலையும் ஒருபோதும் வாடாது. அது உனக்கு வாய்த்தபின் உன்னுடைய பகைவன் என்று ஒருவனைக் கற்பித்து அவன் வேரோடுங் கெடவேண்டுமென்று நீ கருதி முயல்வதும் அவசியமாகுமோ?]

என்றெடுத் தியம்பினன். இராமனுக்கு வசிட்டன் அறிவுறுத்துவதா யமைந்த செய்யுள் பதினன்கிற் பெரும்பகுதி, வெள்ளமும் பறவையும் வேசையர் உள்ளமும்போல் ஒருவழி யோடாத் தன்மைத்தேயாயினும் அவ்வினத்தைச் சேர்ந்த இச் செய்யுட்கும் பின் எடுத்தாளவி ருக்கும் செய்யுள்களுக்கும் இங்குத் தேர்கின்ற பொருள்களே கம்பரது கருத்திற்கு அண்மியனவா யிருக்குமெனத் துணிதற் கிசைதலருமை யன்று. இச் செய்யுள்களின் பாடபேதங்கள் பலவாயிருத்தலும், அவாய்நிலைகளை அதிகமும் வருவித்து வேறுவேறு பொருள்கள் உரைப்பதற் கிடந்தருவதும் பொருள்காண லெளியதன் றென்பதைப் புலப்படுத்தும். எனினும், கம்பரது முதனூலையும் அவருக்கு முன்னிருந்தோர் செப்பியுளவற்றையும், அடிப்படையாகக் கம்பர் கருதியுள சில கொள்கைகளையும், நினைவிற் கொண்டு, முன்னோர் மரபைத் தழுவியோ விலகியோ இவர் விளம்புகின்றார் என்றநோக்கமொடு ஆராய்வார்க்குக் கடக்கரிய இடையூறு அவை விளைத்தில்லா. பகைவரை வென்றுபெற்ற வாகையினும், பகைவரே யில்லையென்ற பெருமையால் பெற்ற வாகை வாடாச் சிறப்பினதுஎன்னும் பொருளை, "தாரொடங்கல் செல்லாது' என்ற சொற்கள் சாதிக்கின்றன. எனின், வீடுமன்முதலானோர் வாய்கயப்புறக் கழறும் வண்ணம், "வேருடன் சிலர் கெடல் வேண்டலாவதேன்" என்று மெய்த்தவ வசிட்டன் வினவலாகின்றான். 'தார்' என்ற சொல்லைச் 'சேனை' என்ற பொருளில் கொள்ளினும், 'தாரொடங்கல் செல்லாதது' எனச் சேர்ந்து, "உன் சைன்னியம் குறையாமல் இருக்குமாயின், நீ வேரொடுங் கெடுவதற்கு வேறோர் வழிவேண்டுமோ" எனப் பொருள் பயக்கலாம். "பகையிலதெனில் போரில்லை; போரிலதெனில் படையும் வேண்டா. இதற்கெதிர் உன் படைப்பலத்தைப் பெருக்கி வருவாயாயின் இதுவே (ஜர்மனிக்கு நேர்ந்தது போல்) உன் கேடாய் முடியும்" என முதனூலிலுள்ள ஆயுதசாலையைக் கம்பர் இங்கு வற்றவைத்ததாகும். மற்றுத் தயரதனே, "கயாத துரக மாக் கடல் கொள் காவலன்" எனத் திருமால்முதல் நீலமாலை வரையில் புகழப்பெற் றிருக்கிறானே என்று அயிர்ப்போர், அரணும் அகழும்போல் அவனுக்கு இவைகளும்அணியேயென வமைந்தனவென்பதைக் கருதித் தெளிதல் வேண்டும். இவ்வகையே வசிட்டன்,

> கோளு மைம்பொறி யுங்குறை யப்பொரு
> ளாளுங் கண்டு நடுங்குறு நோன்மையி
> னாளு மவ்வர சேயர சன்னது
> வாளின் மேல்வரு மாதவ மைந்தனே

[பெரிய தவத்தால் பிறந்த மைந்தனே, போர்க்கொலையும் ஐம்பொறிகளின் வன்மையும் குறையும்படி செய்து, பொருளைக் காணும்போதெல்லாம் இது பொல்லாததாயிற்றே என்று நடுங்குகின்ற நெஞ்சத்திட்பம் உடையவனாய்ப் புரிகின்ற அரசே அரசெனத்தகும். அவ்வரசு வாளைக் காட்டிலும் சிறந்தது.]

என்று மீண்டும் விளம்புவார். இங்குக் கருவூலம் வற்றிற்று. வாள்கொண்டு கொன்று வென்று பொருள் ஈட்டிப் புரியும் அரசொரு அரசோ என முன்னோர் மதத்தை நகுகின்றார் கம்பர். மற்றுப் பிறர்மதம் மறுத்ததோ டமையாமல், பின்செய்யுளில் "அன்பினல்லதோ ராக்க முண்டாகுமோ" என்று அருளல்லால் வேறு கருவூல மில்லாமையையுங் காட்டலாயினர். இதனல், பொருள் வெறுத் தகற்றப்பெற்றதெனும் புணர்ப்புப் பயந்ததில்லை. "ஆறிலொன் றறமென் றருளினல்லது" வேறு வகையில் அரசிற்கு வருவாய் நினையாமையே நேர்கின்றது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் ஆரியர் பாகுபாட்டினைக் கம்பர் அறம் என்னும் ஒன்றிலேயே அடக்கி வாழ்க்கையின் நோக்கத்தைப் பாடினர்.

கற்றவர்போல், அறமுடைய அரசர்க்கும் தன்தேயமென்பதில்லை. ஏனெனில் தன் தேயத்தைத் தன் குடிகளைக் காக்கவேண்டுமென்ற ஓர் பிரிநிலைநினைவு எந்நாளும் உயர்ந்ததன்று. தேசபக்தி யென்னு மது, "கடைசியாக இதுவே நமக்குக் கதி எனக் கயவர் சென்று அடையும் இடம்" (Patriotism is the last refuge of Scoundrels) என டாக்டர் ஜான்ஸன் (Doctor Johnson) இயம்பியது சிறிது வேறுபட்ட பொருளிலாயினும், அதனுள் அடங்கியுள தத்துவத்தைத் தமிழ்க்கவிகள் நன்கு காத்தனர். அதனிலும் கம்பர், குடிகளுக்கேனும் அரசனுக்கேனும் 'தேசபக்தி' யிருந்ததென்று எங்கும் பாராட்டியிருக்கக் காண்கிலம். தமிழில் இப் பொருள்தரும் சொல்லேனும் தொடரேனும் இல்லாமையே இவ்வயின் நிலவிய தருமத்திற் கிது அயலாயிற்றென்பது குறிக்கப்படுகின்றது. முன் தயரதனைப்பற்றிக் கூறுமிடத்துக் கம்பர்,

> வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினன்
> உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால்
> செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
> உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினன்.

என்னுமாற்றல் உலகத்திலுள்ள உயிர்களனைத்தையும் குறிக்கொண்ட கொள்கை தெரியலாகின்றது. இதற்கு நேராக இவ்விடத்தும் வசிட்டன்,

> வைய மன்னுயி ராகவம் மன்னுயி
> ருய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்
> கைய மின்றி யறங்கட வாதருள்
> மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ.

[உலகத்திலுள்ள உயிர்களின் தொகுதியே தன்னுயிராகவும், அவ்வுயிர்கள் உய்யும்படி தாங்குவதற்கு அமைந்த உடலே தானகவும் பாவித்திருக்கும் அரசன், முதலறத்தின் மேன்மையில் சிறிதும் சங்கையுற்றுச் சலித்து அதனைக் கடக்காமல், அருள் என்னும் மெய்ந்நிலையில் நிற்பானாயின், பிறகு வேள்விகள்சில அவன் செய்தல் வேண்டுமோ!]

என வற்புறுத்தலாயினன். வையத்திலுள்ளோர் வாழ்விற்கு ஆதாரமாய செய்கையும் சிந்தையும் சீரிய, மற்றுத் தன் தேயம் தன்இனம் என்ற பான்மையாற் பயில்வதெல்லாம் சிறியவே என்ற உண்மை இச் செய்யுள்களால் இனிது விளங்குகின்றது. பின்னும்,

> இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
> வினையன் றூயன் விழுமியன் வென்றியன்
> நினையு நீதி நெறிகட வானெனில்
> அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ

[இன்சொற்களைப் பேசுபவன்: வரையாது ஈகின்றவன்: பகுத்தறிவுடையவன்: முயற்சியுடையவன்: தூய்மையானவன்: சீலமுடையவன்: வெற்றியுடையவன்: நினைத்தற்குரிய நீதியின் வழியைவிட்டு விலகாதவன்: என்ற தன்மை வாய்ந்த மன்னனுக்கு அழிவென்பது உண்டாகுமோ!]

என, நீதியால் அன்பால் அறத்தால், ஆக்கமும் அழிவின்மையும் சாதிக்கப்பெறுகின்றனவேயன்றிச் சூழ்ச்சியும் வேள்வியும், "சமயோசித தர்மமும்" கம்பரது நூலில் தலையெடுக்க இயலாமற் கழிகின்றன. இவ்வகையே

> சீல மல்லன நீக்கிச் செம் பொற்றுலைத்
> தால மன்ன தனிநிலை

தாங்குவதே ஞாலமன்னர்க் குரிய பெருமை என மெய்த்தவ வசிட்டன் மீண்டும் பகர்வான்.

இவைகளினின்றும் வியாதர் வள்ளுவர் வான்மீகி அனைய பெரியோர் தம்மொழிகளில் அறத்தாறு புகட்டுவனவற்றை மட்டுமே கம்பர் தன்னுடைமையாக்கிக் கொண்டு, சார்புறச் சாய்வுகாட்டும் யாவையும் விலக்கி விட்ட உணர்வின் மேன்மை, மலையிலக்கா யல்லாவிடினும், மறைபொருளாய் நிற்பதைத் தேர்ந்தவராகின்றோம்.




## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும்,பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

### திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணு 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்திபுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணு 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

## நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமா யிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷூர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷூர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,
பிராட்வே, சென்னை.

## ANCIENT JAFFNA

A MOMENTOUS BOOK

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

With a ForeWord By

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5—8—0. V. P. Charge Extra.**

***MANAGER:—***

***KALANILAYAM,***
***11, VELLALA STREET,***
**Purasawalkam, MADRAS.**

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு, செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

**விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு**

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




## வர்த்தமானம்

"பாரதி":—உத்தம பாளயத்திலிருந்து பிரசுரமாகி வரும் "பாரதி" என்னும் உயர்தர மாதாந்தப் பத்திரிகைக்கு இரண்டாவது ஆண்டு பிறந்திருக்கின்றது. இதன் ஆசிரியர், ஸ்ரீமான் தேவாரம் நாராயணசுவாமி அவர்கள் தம்முடைய இரத்தத்தாலேயே அது எழுதப்படுகின்றதென இவ்வருட முதலிதழில் உரைத்திருக்கின்றார். அப்பத்திரிகையைப் படித்து வருவோர் அனைவரும் இது உண்மையேயென ஒருவாயா யுரைப்பர். எல்லாவகையிலும் தம் நாடு துன்பம் நீங்கி விருத்தியடையவேண்டுமென்று முயல்கிறவோர்நற்சிந்தை வாய்ந்தவர்தம் உணர்ச்சியின் சிறப்பும் தூய்மையும் சிறிதுந் தேய்தலின்றி ஆரம்ப முதல் ஒருபடித்தாய்ப் "பாரதி'யில் விளங்கிவரக் காண்கின்றோம். எல்லாரும் அதனைப் படித்து அதன்பயன்களை ஆராய்ந்து அறியவேண்டுமென் றவாவுகின்றோம்.

***

**காந்தி அடிகளின் முயற்சி** :—காந்தி அடிகள் சட்டமறுப்பிற்கானவழியில் முயலுங்கால் தாம்கைது செய்யப்படின் இவ்வியக்கம் இடையறாது நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்துவருகின்றார் என்று தெரிகின்றது. ஸ்ரீ மோத்திலால் நேருவும், ஜவாரிலால் நேருவும் காந்தியடிகளுடன் இனி நிகழவிருக்கும் சுதந்தரப்போரை நடத்துமாறு எவ்வாறெனச் சூழ்ந்து வருகின்றனர். காந்தி அடிகள் ராஜப் பிரதிநிதிக்கு ஆர். ரேனால்ட் என்னும் ஆங்கில நண்பர் மூலம் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். 4-ந்தேதியன்று கடிதம் ராஜப்பிரதிநிதியினிடம் சேர்ந்திருக்கும். கடிதத்தின் விபரம் ரகஸியமாகவிருக்கின்றது. ராஜப் பிரதிநிதியின் பதிலை அறிந்து அது வெளியிடப்படும். ஒருவார காலஅளவிற்குள் பதில் கிடைக்கவில்லையாயின் காந்தியடிகள் தமது சிஷ்யர் பலருடன் கடற்கரை ஓரம் சென்று, உப்பு தயார் செய்வார். காந்தியடிகள் கைதுசெய்யப்படின் ஸ்ரீ வல்லபாய்பட்டேல் தலைமை வகித்து இவ்வுப்புச் சத்தியாக்கிரஹத்தை நடத்திவைப்பார். சத்தியாக்கிரஹம் பலாத்காரமற்றவழி நடக்குமாயின் கிராமஉத்தியோகஸ்தர்கள் வேலையை ராஜிநாமாச் செய்தல் வரி கொடுக்கமறுத்தல் முதலிய துறைகளிலும் முயற்சி எடுத்துக்கொள்ளப்படும். ஸ்ரீமகாதேவ தேசாய் எந்தெந்த விடங்களில் உப்பு தயாரிக்க வசதியுண்டென்பதைச் சுற்றுப்பிரயாணம் செய்து அறிந்து வந்துளார் என்று ஆமதாபாத் செய்தி கூறுகின்றது.


**ரூ. 500** இனும்! எப்படி?

விபரம் தெரிய ½ அணா ஸ்டாம்பும் விலாசமும் அனுப்புங்கள்.

கே. எஸ். முத்தையா கம்பனி,
தபாற்பெட்டி 99. சென்னை.



## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டுபிறந்துள இது போன்ற நவீன மாதாந்தர சஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. விஷயங்கள் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் புலப்படும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங்கள். வருடசந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

10-ம் பதிப்பு **ஆங்கில ஆசான்** வெளி வந்து விட்டது!!

எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.




60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்யாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளி வந்துளது. இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவா யிருக்கின்றன. வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும இவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்க முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார்கள். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கங்கள். அழகிய சீமை காலிகோ பைண்டு. விலை ரூ. 2.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.



## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை
ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள் தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்கள் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு | ,, ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணா | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' காரியாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

KALANILAYAM. REG. NO. M. 2324.

# OUR OWN PUBLICATIONS

**THE ARAVIDU DYNASTY OF VIJAYANAGARA** Vol. 1. 1542-1614

*by* THE REV. HENRY HERAS, S.J., M.A., Professor, Indian History, St. Xavier's College, Bombay, with a preface by SIR RICHARD CARNAC TEMPLE, BT. **Rs. 10**

The History of the Aravidu Dynasty of Vijayanagara could properly be entitled 'The Forgotten Dynasty of the old Forgotten Empire'. Mr. Robert Sewell devoted three chapters to the history of this dynasty and Fr. Heras promises three big volumes of which this is the first. From the time of Mr. Sewell's publication it has often been repeated that the Empire of Vijayanara met its end on the field of Talikota, in 1565. The present work discloses that the Empire continued in its splendour for several years. The author shows moreover that this period marked the climax of the Telugu domination over the most southern part of the peninsula of India.

**THE LAW AND THEORY OF RAILWAY FREIGHT RATES**

*by* K. C. SRINIVASAN, M.A., F.C.S. **Rs. 10**

**THE POLITICAL PHILOSOPHIES SINCE 1905**

*by* POF. BENOY KUMAR SARKAR. M.A. **Rs. 4**

**ECONOMIC DEVELOPMENT:**

Snap-shots of World movements in Commerce, Economic Legislation, Industrialism and Technical Education *by* PROF. BENOY KUMAR SARKAR. Recommended by the Calcutta University for M.A. in commerce and in Allahabad University as a Reference book. **Rs. 8.**

**LIFE OF BARRISTER SAVARKAR**

*by* CHITRA GUPTA. The story of the life of this famous patriot written by a close friend is packed with thrilling incidents, of how as a Leader of the revolutionist party, he led the movement in India and in England, how he was arrested and his dramatic escape at Marseilles by jumping out through the port-hole of the ship. A book of enchanting interest and full of interesting lessons to our New India. **Rs. 1-8**

**HINDU-PAD-PADASHAHI:**

or a Critical Review of the Hindu Empire of Maharashtra *by* VINAYAK DAMODAR SAVARKAR. with an introduction by Dr. R. C. MAZUMDAR. M.A., Ph. D., Dacca. **Rs. 3**

**ENGLAND'S EDUCATIONAL POLICY IN INDIA**

*by* V. V. OAK B.A., S. T. C. Pp. 1 to 24x168. This book deals about the educational policy pursued by the Government of India during the last 100 years in which Mr V. V. Oak has attempted to draw a realistic picture of the educational position in India as compared with the other civilised countries, by means of graphical illustrations and tabular statements. **Rs. 2**

**LOK. TILAK'S GITHA RAHASYA or THE PHILOSOPHY OF ACTION**

*by* MANGALVEDKAR, *3rd revised edn.* **Rs. 2**

**DIALOGUE DIVINE AND DRAMATIC**

*by* GITANANDA BRAHMACHARI **Re. 1**

1. கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் ஆ மா. ஸ்ரீ. இராகவன் B. A. L. T. ... 0 2 6
2. கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் ... 0 3 0
3. கோபால் புதிய தமிழ் வாசக மூன்றும் புஸ்தகம் ... 0 4 0
4. கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் ... 0 4 6
5. கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் ... 0 6 0
6. ஆஞ்சநேயர்—ம. குப்புசாமி முதலியார் ... 0 5 0
7. சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரிநாதர் ... 0 5 0
8. கம்பர் அல்லது கவியரசு - ஆ. நா. கன்னையா ... 0 5 0
9. தமிழ்ச் சிற்றிலக்கண வினுவிடை— கா. ரா. கோவிந்தராஜ முதலியார் 0 4 0
10. சிறுவர் இந்து தேச சரித்திரம் வி ஜயராம ஐயர் ... 0 5 0
11. லிவிக்ஸ் துரைத்தனவிளக்கம் 1-பாகம் 4-வகுப்புக்குரியது—S சுப்பிர மணிய ஐயர் ... 0 5 0
12. ஷை இரண்டாம் பாகம் 5-வது வகுப்புக்குரியது ... 0 6 0
13. கோபால் வாய்ப்பாடு ... 0 1 6
14. சூரவாதித்த சோழன், R. சாம்பசிவ சர்மா ... 0 12 0
15. புத்திமானே பலவான் ஏ. பரசுராமையர் ... 0 10 0
16. கிருஷ்ணதேவராயர் - கே. பி சேஷாத்திரி ஐயங்கார் ... 0 8 0
17. பகீரதன், ஆ. நா. கன்னையா ... 0 6 0
18. பத்திராயு அல்லது ஆட்சிக் குரியோன்-மே. வீ. வேணு கோபால பிள்ளை ... 0 6 0
19. இலங்கேசன்–S. சீனிவாசையர் ... 0 6 0
20. **English Selection for Higher Forms.** illustrated Revised Edition **Re 1.**
21. **TheNew Era Story Books Series,** Book I by C. Gordon, B. Ed. **As. 3.**
22. Book II " **As. 4.**
23. Book III " **As. 5.**
24. **Nanda the Paraiah Saint** by C. S. Rangaswami Aiyangar B. A., L. T. **As. 3.**
25. **Fables from Mahabharata** by N. Paramasivam Iyer B. A., L. T. **As. 3.**
26. **Chandrahasa** Revised by Prof. J. C. Rollo. M. A. **As. 6.**
27. **The Clay Cart** (In the press) **As. 6.**

**(V. P. Charges, Extra of the Prices.)**

**B. G. PAUL & Co., FRANCIS JOSEPH STREET, MADRAS.**

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)